வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 04 15.03.2023 புதன்கிழமை இதழ் : 96 பக்கங்கள் : 16



## பிரதமர் பதவியில் மாற்றம் இல்லை!

*ஜனாதிபதி ரணில்*

*கொழும்பு, மார்ச் 15*

*"இந்த அரசில் மீண்டும் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்கும் எண்ணம் மகிந்த ராஜபக்ஷவுக்கு இல்லை. அரசின் கட்டமைப்பை சீர்குலைக்க முயற்சிப்பவர்கள் நாளுக்கு நாள் வதந்திகளை வெளியிடுவார்கள். அதில் ஒன்றுதான் மீண்டும் பிரதமர் பதவியை மகிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்கவுள்ளார் என்பதும் அடங்கும் என்று நான் நினைக்கின்றேன்."*

*- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.*

*மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக்குவதற்கு சிறீலங்கா* 16

# அரச துறைகள் இன்று முடங்கும்!

**கொழும்பு, மார்ச் 15**

**நாட்டின் அரச - அரச அனுசரணை பெற்ற 47 பிரதான தொழில் சங்கங்கள் இன்று புதன்கிழமை பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளன என்று அறிவித்துள்ளன. இதனால், நாட்டின் அனைத்துத் துறைகளும் கிட்டத்தட்ட முழுமையாக முடங்கக்கூடும்.**

*அரசாங்கத்தின் வரி உயர்வு - வாழ்க்கை செலவு அதிகரிப்பை கண்டித்தும் கடந்த 8ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக தொழில்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் இன்றைய தினம் அனைத்து தொழில்சங்கங்களும் கூட்டாகப் பணிப்புறக்கணிப்பில்* 16

## வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்!

*அரசாங்கம் எச்சரிக்கை*

*கொழும்பு, மார்ச் 15*

*அத்தியாவசிய சேவைக்குள் உள்ளடங்கும் துறைகள் வர்த்தமானி ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த சேவையினர் இன்றைய வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் அத்தியாவசிய பொது சேவை சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.*

*அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன இந்த எச்சரிக்கையை நேற்று விடுத்தார்.* 16

## போக்குவரத்து சேவைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது!

*இ. போ. ச., தனியார் பேருந்து சங்கம் அறிவிப்பு*

*கொழும்பு, மார்ச் 15*

*புகையிரத தொழிற் சங்க போராட்டத்தினால் பொது போக்குவரத்து சேவைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. வழமைக்கு மாறாக அதிக பேருந்துகளை இன்று சேவையில் ஈடுபடுத்துவோம் என்று அரச மற்றும் தனியார் பேருந்து சங்கங்கள் குறிப்பிட்டுள்ளன.*

*புகையிரத தொழில் சங்க போராட்டத்தால் பொது போக்குவரத்து சேவைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. தூர பிரதேசங்களுக்காக மேலதிகமாக இன்று அதிக பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.* 16

## கூட்டமைப்பும் அடங்கலாக விரைவில் புதிய கூட்டணி!

*இராதாகிருஷ்ணன் எம். பி.*

*நுவரெலியா, மார்ச் 15*

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் உள்ளடக்கி புதிய தமிழ் கூட்டணி ஒன்றை அமைப்பதற்கான முயற்சி தற்போது முன்னெடுக்கப்படுகிறது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற் போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.*

*நுவரெலியாவில் அவர் பங்கேற்ற கூட்டம் ஒன்றிலேயே இதனைத்* 16

## தமிழ் மீனவரை கட்டிவைத்த பெரும்பான்மை இனத்தவர்!

*முல்லைத்தீவு, மார்ச் 15*

*கருநாட்டுக்கேணியை சேர்ந்த மீனவர் ஒருவரை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் வலையால் கட்டி வைத்திருந்தமை அந்தப் பகுதியில் நேற்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.*

*கருநாட்டுக்கேணியை சேர்ந்த கரைவலை தொழிலாளி ஒருவரே இவ்வாறு பெரும்பான்மை* 16


## நாமல் ராஜபக்ஷ 'புறொய்லர்' கோழி!

*விமல் வீரவன்ஸ கூறுகிறார்*



*கொழும்பு, மார்ச் 15*

*சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அரசியல் அனுபவமோ - அறிவோ இல்லாத 'புறொய்லர்' கோழி என்று பாராளுமன்ற உறுப்பினர் விமல்* 16





# பொதுமக்கள் - பொலிஸார் நாகர்கோவிலில் முறுகல்!

*• துப்பாக்கிச் சூடு, தடியடி தாக்குதல்*
*• சப்பைரத கொட்டகை தீக்கிரை!*

*வடமராட்சி, மார்ச் 15*

*வடமராட்சி கிழக்கு - நாகர்கோவில் கிழக்கு மயானம் ஒன்றுக்கு மதில் கட்டி எல்லை அமைப்பது தொடர்பில் எழுந்த பிரச்னை பொது மக்கள் - பொலிஸார் முரண்பாட்டில் முடிந்தது. இதில், பொலிஸார் துப்பாக்கி சூட்டை நடத்தியதுடன் பொது மக்களையும் தாக்கினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.*

*துப்பாக்கி சூடு நடத்தப்பட்டமைக்கான ஆதாரமாக துப்பாக்கி சன்னங்களின் வெற்றுக் கோதுகள் அந்தப் பகுதியில் காணப்பட்டன. ஆனாலும், தாம் துப்பாக்கி சூடு நடத்தவில்லை என்று பொலிஸார்* 16

## மயானம் அமைக்கும் பணி தற்காலிகமாக நிறுத்தம்!

*வடமராட்சி, மார்ச் 15*

*நாகர்கோவிலில் மயானத்துக்கு மதில் கட்டும் பணிக்கு தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளது.*

*நாகர்கோவில் கிழக்கில் மயானம் ஒன்றுக்கு மதில் கட்டி எல்லை அமைப்பது தொடர்பில் எழுந்த பிரச்னையை அடுத்து பொலிஸார் - பொது மக்களிடையே நேற்றுமுன்தினம் இரவு முரண்பாடு ஏற்பட்டது.*

*இதையடுத்து நேற்று பருத்தித்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் தென்னகோன் தலைமையிலான குழுவினர்* 16

## உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவது அரசின் பொறுப்பு

*ஜனாதிபதிக்கு மகாநாயக்கர்கள் வலியுறுத்து*

*கொழும்பு, மார்ச் 15*

*ஜனநாயகத்தை பாதுகாப்பது என்பது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் மூலம் மக்களின் ஆணையை நிலைநாட்ட வேண்டும். இதற்காக உள்ளூராட்சி மன்ற தேர்தலை அதற்கேற்ப நடத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு எனவும் மல்வத்து, அஸ்கிரிய மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு வலியுறுத்தியுள்ளனர்.*

*மல்வத்து பீடத்தின் மகாநாயக்கர் திப்பட்டுவாவே சிறீ* 16

## உள்ளூராட்சி மன்றுகளின் அதிகாரம் 19முதல் ஆணையாளர், செயலர் வசம்!

*கொழும்பு, மார்ச் 15*

*உள்ளூராட்சி மன்றங்களின் புதிய பதவிக் காலம் தொடர்பில் அறிவிக்குமாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் அமைச்சு தேசிய தேர்தல் ஆணைக் குழுவிடம் வலியுறுத்தி யுள்ளது.*

*ஏப்ரல் 25 ஆம் திகதி உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த ஆணைக் குழு அறிவித்துள்ளது. ஆனால், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் எந்த திகதியில் இருந்து ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்படவில்லை.*

*ஏப்ரல் 25 தேர்தல் இடம்பெற்றால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் 2024.01.01ஆம்* 16

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

சசிகலா ரவிராஜ் என்ற பெயரில் முகநூலில் எழுதப்பட்டிருக்கும் ஒரு பதிவு, இந்த ஊர்க்குருவியின் கவனத்தை பெற்றது.

அது மாமனிதர் ரவிராஜ் அவர்களின் மனைவி சசிகலாவினுடைய உத்தியோகபூர்வ முகநூல் கணக்கா அல்லது அவர் பெயரில் உள்ள வேறு ஒருவரின் முகநூல் கணக்கா என்பது தெரியவில்லை.

ஆனால், அப்படியொரு பெயரில் பலரின் கவனத்தையும் பெற்றிருக்கும் ஒரு பதிவை இதுவரை தனது அல்ல என்று சசிகலா ரவிராஜ் அவர்கள் மறுக்கதாகவும் தெரியவில்லை. அதற்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்றாலும், அவர் அதனை கண்டுகொள்ளாமலும் இருக்கலாம்.

ஆனால், அதில் தெரிவிக்கப்பட்டிருக்கும் ஒரு விடயம் மிகவும் கவனத்துக்குரியது.

இது ஒரு கட்சி சார்ந்த விடயம் என்றாலும், அது தமிழ் மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கின்ற ஓர் அரசியல் கட்சியின் உள்விவகாரம் என்பதால் அது அனைவரின் கவனத்துக்கும் உரியது.

அந்தப் பதிவில் பேசப்படுகின்ற விடயங்கள் எல்லாமே மிகவும் முக்கியமானவைதான். ஆனாலும் அதில் முதலில் உள்ள ஒரு விடயத்தை அப்படியே கீழே தருகின்றோம்.

'மதிப்புக்குரிய இரா. சம்பந்தன் ஐயா மீது பல விமர்சனங்கள் இருந்தாலும் சில விடயங்களில் அவரின் இறுக்கமான முடிவுகளை யாரும் கடந்து செல்லமுடியாது. இவற்றை சகலரும் நன்கறிவர்.

வயது முதிர்வு காரணமாக முழுமையான அரசியலில் ஈடுபடுவதில் சற்று தாமத நிலை உள்ளதை உணர்ந்த சம்பந்தன் ஐயா, கடந்த தை மாத தொடக்கத்தில், சுமந்திரனை தனது கொழும்பு இல்லத்துக்கு அழைத்து எதிர்கால அரசியல் தொடர்பில் வழமை போன்று நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலம் தொடர்பில் பல விடயங்களை கதைத்துக் கொண்டிருந்துள்ளார்.

அதன்போது, இப்போதுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை அவசியம். பங்காளிக் கட்சிகளை அரவணைத்து செல்வதே எமது பலம், நான் எல்லா அரசியல் கலந்துரையாடல்களிலும் பங்குபற்றுவது கடினமாக உள்ளதால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் விரும்பும் பதில் தலைவர் ஒருவரை நியமிப்பது காலத்தின் கட்டாயம் என சம்பந்தன் ஐயா சுமந்திரனிடம் ஆலோசித்துள்ளார்.

அப்போது சம்பந்தன் ஐயா, இன்றைய அரசியல் சூழ்நிலைக்கும் பங்காளிக் கட்சிகளின் புரிந்துணர்வையும் பார்க்கின்றபோது பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரனை நியமிக்கலாம், நீங்கள் சர்வதேச விவகாரங்களை வழமை போன்று பாருங்கள் என ஆலோசனை கூறியுள்ளார்.

அது எப்படி சாத்தியம். பதில் தலைவர் முக்கிய பதவி. என்னால் இதை அனுமதிக்க முடியாது நீங்கள் எப்படி தனியாக தீர்மானிப்பீர்கள். சிறீதரனை வடக்கு - கிழக்கில் பெரிய அளவில் தெரியாது. உங்களின் தனிப்பட்ட கருத்தை நான் ஒருபோதும் ஏற்க மாட்டேன் எனக் கூறி கோபத்துடன் சம்பந்தன் ஐயாவின் வீட்டிலிருந்து சுமந்திரன் வெறியேறியுள்ளார்.

மேற்படி சம்பவம் இடம்பெற்று ஒரு வாரத்தின் பின் சம்பந்தன் ஐயா சிறீதரனை அழைத்து நடந்த விடயங்கள், எதிர்கால அரசியல் தொடர்பில் சுமார் இரண்டு மணி நேரங்களுக்கு அதிகமாக நீண்ட கலந்துரையாடல் செய்துள்ளார்.'

இதுவே அந்த பதிவில் உள்ள முதலாவது தகவல்.

இதன் உண்மைத்தன்மை இதுவரை உறுதிசெய்யப்படவில்லை. ஆனால், அதில் சம்பந்தப்பட்டவர்கள் இருவர். ஒருவர் சம்பந்தன் ஐயா. மற்றையவர் சுமந்திரன். இந்த இருவரும் இதுபற்றி இதுவரை பகிரங்கமாக மறுப்பு தெரிவித்ததாகவும் தெரியவில்லை.

அந்தப் பதிவில் கடைசியில் தெரிவிக்கப்பட்டிருக்கும் மற்றுமொரு தகவலை அண்மையில் சுமந்திரன் அவர்கள் தனது முகநூலில் மறுத்திருந்ததையும் காண முடிந்தது.

அந்தப் பதிவில் மற்றுமோர் இடத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது:

'நேற்று முன்தினம் (இந்தப் பதிவு மார்ச் 12இல் எழுதப்பட்டது) சம்பந்தன் ஐயாவின் வீட்டிற்கு முன்னனுமதி பெறாமல் வழமை போன்று சென்று சந்திக்க முற்பட்டபோது சம்பந்தன் ஐயா சுமந்திரனின் நம்பிக்கைத் துரோகத்தில் வெறுப்படைந்து சுமந்திரனை பார்க்க விரும்பவில்லை என கூறியது உண்மை. சுமந்திரன் வழமை போன்று பல முயற்சிகள் செய்தும் தனது அறையில் இருந்து சம்பந்தன் ஐயா வெளியில் வராததால் ஐயாவின் மகனுடன் சுமார் ஒரு மணி நேரம் சுமந்திரன் கதைத்திருந்து விட்டு திரும்பியது உண்மை.' இவ்வாறு செல்கின்றது அந்தப்பதிவு.

இவ்வாறான செய்தி ஒன்றையே சுமந்திரன் தனது முகநூலில் மறுத்திருந்தார். தான் சம்பந்தன் ஐயாவை சந்தித்து நீண்ட நேரம் உரையாடியதாக அவர் தெரிவித்திருந்தமை கவனிக்கத்தக்கது.

சம்பந்தன் ஐயாவுடன் தொடர்புபட்டுள்ள இந்தத் தகவலை அவரது நெருங்கிய உறவினர் ஒருவரே தனக்கு தெரிவித்ததாகக் கூறும், சசிகலா அதனை தான் எதற்காக பொதுவெளியில் வெளியிடுவதாகவும் தெரிவிக்கவில்லை.

இப்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லை. சம்பந்தனும் இப்போது கூட்டமைப்புக்கு தலைவரல்ல. அவர் தமிழரசின் பாராளுமன்ற குழுத்தலைவர் மட்டுமே. கூட்டமைப்பிலுள்ள மற்றைய கட்சிகள் தேர்தலில் தமிழரசின் சின்னத்தில் போட்டியிட்டதால், அவர்கள் தமிழரசின் எம். பிக்கள் என்றாலும், அவர்கள் இப்போது கூட்டமைப்பு எம். பிக்கள்.

சம்பந்தன் ஐயா எது சரி என்று நினைக்கின்றாரோ அதனை அவர் செய்ய முயற்சி செய்யவேண்டும். ஒருவர் எதிர்க்கிறார் என்பதற்காக அதனைக் கைவிடுவது சரியானது தானா என்பது தெரியவில்லை. அவர் இல்லாவிட்டால் இன்னுமொருவரையாவது நியமிக்க வேண்டாமா?

- ஊர்க்குருவி

# வவுனியாவில் இன்று ஆசிரியர்கள் கவனவீர்ப்பு

வவுனியா, மார்ச் 15

சம்பள உயர்வுகோரி இன்று நடக்கும் போராட்டத்துக்கும் வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாக நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்துக்கும் ஆதரவு தருமாறு வவுனியா மாவட்ட ஆசிரியர் சங்கங்கள் அழைப்பு விடுத்துள்ளன.

நேற்று ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் நடத்திய செய்தியாளர் சந்திப்பில்,

"சுபோதினி ஆணைக் குழுவின் படி மூன்றில் ஒரு பகுதி சம்பள உயர்வு வழங்கப்பட்டது. மீதி அதிகரிப்பு இன்றுவரை வழங்கப்படவில்லை. இப்போது பொருளாதார சுமை அதிகரித்துள்ள காலத்தில் அதனை வழங்குவதற்கு அரசாங்கம் ஏற்ப்பாடு செய்யவேண்டும்.

அல்லது இருபதாயிரம் ரூபாய் இடைக்கால கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன், அரசாங்கத்தால் பிரயோகிக்கப்படும் அடக்குமுறைகள் நீக்கப்படவேண்டும் என் றும் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது", என்று தெரிவித்தனர்.

வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாக இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கவனவீர்ப்பு போராட்டம் நடைபெறும். இதில் அனைத்து ஆசிரியர்கள், அதிபர்களை பங்கேற்குமாறும் அழைப்பு விடுக்கப்பட்டது.

(ஐ-07)

# திருநர்கள் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு

முல்லைத்தீவு, மார்ச் 15

"திருநர்களுக்கான சமூக சமவாய்ப்பை உரு வாக்குதல்" எனும் தொனிப்பொருளில் விழிப்பு ணர்வு நடவடிக்கை நேற்று முன்தினம் கரை துறைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்ட பத்தில் நடைபெற்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் கிறிச லிஸ் நிறுவனம் முன்னெடுத்து வரும் "மாற்றம்" திட்டத்தின் கீழ் இந்த செயலமர்வு மேற்கொள் ளப்பட்டது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் முன்னாள் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் திருமதி உதயகுமார் றனிஸ்ரலா தலைமையில் இந்த விழிப்புணர்வு செயலமர்வு நடை பெற்றது.



இதில், பல தரப்பினரும் பங்கேற்றனர். இந்த நிகழ்வில், திருநர்கள் தாங்கள் எதிர் கொள்ளும் சவால்கள், சிக்கல்கள் குறித்தும் கருத்துகளை பகிர்ந்தனர். அத்துடன், கலைநிகழ்வுகளையும் நிகழ்த்தினர்.

(ஐ)

# மேல் மாகாண பாடசாலைகளில் தவணைப் பரீட்சை ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 15

மேல்மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இறுதித் தவணைப் பரீட்சைக்காக இன்று நடைபெறவிருந்த பாடங்கள் எதிர்வரும் 21 மற்றும் 22 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண கல்விப் பணிப்பாளர் சிறிலால் நோனிஸ் அனைத்து கோட்டம் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

இதன்படி, 9ஆம் தரத்தின் கணிதம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய பாடங்கள் எதிர்வரும் 21ஆம் திகதியும், 10 மற்றும் 11ஆம் தரங்களின் இரண்டாம் பகுதிப் பாடங்கள் 22ஆம் திகதியும் நடைபெறும் என மாகாணக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரச, அரை அரச மற்றும் தனியார் துறை தொழிற் சங்கங்கள் இணைந்து இன்று மேற்கொள்ளவுள்ள ஒரு நாள் பணிப்புறக்கணிப்பில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் கலந்துகொள்ளவுள்ளதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 15

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் வாராந்த சுக்கிர வார சிறப்பு சொற்பொழிவு ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கத்தின் தலைமை உரையைத் தொடர்ந்து, சிறப்பு சொற்பொழிவை சைவப்புலவர் ஏ. அனுசாந்தன் "உதித்தனன் உலகம் உய்ய" என்னும் தலைப்பில் ஆற்றுவார்.

சொற்பொழிவின் இறுதியில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

(ஐ)

# சர்வதேச மகளிர் தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு நடத்தும் சர்வதேச மகளிர் தினம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் வடக்கு மாகாணத்தை சேர்ந்த 8 சிறந்த பெண் சாதனையாளர்கள், 15 பெண் தொழில் முயற்சியாளர்கள், மற்றும் பெண்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டை முன்னிலைப் படுத்தல் எனும் கருப்பொருளில் சிறந்த குறும்படம், புகைப்பட போட்டியில் தெரிவானவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வின் ஓர் அங்கமாக பெண் தொழில் முயற்சியாளர்களின் உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனைக் கூடமும் இன்று காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
15.03.2023 புதன்கிழமை
பிலவ வருடம், பங்குனி 01

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தென்னிலங்கை மாணவர்களின் அழைப்பு?

வசந்த முதலிகே தலைமையிலான அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் அமைப்பினர் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுடன் கலந்துரையாடி இருக்கின்றனர். இதன்போது, ரணில் அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான போராட்டங்களில் இணைந்து கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதன்போது, தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் முன்வைத்த விடயங்களை வசந்த முதலிகே குழுவினர் ஏற்றுக்கொண்டனரெனவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியின்போது, வசந்த முதலிகே தலைமையிலான அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் முன்னணியில் செயல்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து, ரணில் விக்கிரமசிங்கவை அதிகாரத்திலிருந்து அகற்றுவதற்கான போராட்டங்களை தொடரப் போவதாகவும் அறிவித்திருந்தனர். இவ்வாறானதொரு பின்னணியில் சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் குற்றச்சாட்டில் வசந்த முதலிகே கைது செய்யப்பட்டார். தற்போது, மீண்டும் தென்னிலங்கையில் அடுத்த கட்ட ‘அறகலய’ என்னும் சுலோகத்தின் கீழ், களமிறங்குவதற்கான தயாரிப்புகளில் ஈடுபட முயற்சிக்கின்றனர்.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், யாழ். பலக்லைக்கழக மாணவர்களின் ஆதரவு கோரப்பட்டிருக்கின்றது. யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் ஆதரவை கோருவதென்பது, ஓர் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்ட நகர்வாகும். இதன்மூலம் அனைத்து சமூகமும் ரணில் அரசாங்கத்துக்கு எதிராகத் திரண்டு வருவதற்கு தயாராக இருக்கின்றது. என்பதை காண்பிப்பதே இந்த நகர்வுக்கு பின்னாலுள்ள நோக்கமாகும்.

வரலாற்றில் தமிழ் மாணவர்களும் சிங்கள மாணவர்களும் ஓரணியாக செயல்பட்டதில்லை. இதற்கு இலங்கைத் தீவின் அரசியல் பிளவுநிலையே காரணமாகும். இப்போது இடம்பெற்றது போன்று முன்னரும் பல சந்திப்புகள் காலத்துக்குக் காலம் இடம்பெற்றிருக்கின்றது. கோட்டாபயவுக்கு எதிரான அறகலயவின்போதும், பலர் யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்றதும் - கலந்துரையாடியதும் உண்டு. ஆனால், தமிழ் சூழலில் சுமந்திரன், சாணக்கியன் போன்ற ஒரு சிலரை தவிர ஏனையவர்கள் காலிமுகத்திடல் செயல்பாடுகள்மீது பெரியளவில் நாட்டம் காண்பிக்கவில்லை. ஒருவேளை ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டால், தமிழ் சூழலில் அதுபற்றி அலட்டிக் கொள்ளப்படப் போவதில்லை.

தென்னிலங்கை சூழலில்கூட, அவ்வாறான எதிர்ப்புக்கள் எந்தளவு தூரம் கவனிக்கப்படும் என்பது சந்தேகமே! ஏனெனில், ரணிலை எதிர்ப்பவர்கள் எவரிடமும் மாற்றுத் திட்டங்கள் இல்லை. தவிர, தேசிய மக்கள் சக்தி என்னும் பெயரில் புதிய வடிவமெடுத்திருக்கும் ஜே. வி. பியின் ஆதரவு சற்று அதிகரித்திருக்கின்றது - இந்த நிலையில்தான் தேர்தலை நடத்தப்பட வேண்டுமென்னும் கோரிக்கைகளை அவர்கள் கையிலெடுத்தனர். வசந்த முதலிகே குழுவினரும் தேசிய மக்கள் சக்தி போன்றதொரு கட்சி செல்வாக்கு பெறுவதையே விரும்புகின்றனர். ஜே. வி. பி. மற்றும் முன்னிலை சோசலிஷ கட்சிக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் கணிசமான செல்வாக்கு உண்டு.

இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகள் ரணிலில் நகர்வுகளை பின்னுக்குத் தள்ளுவதற்கு பயன்படலாம். அதாவது, ரணிலின் நகர்வுகள் வெற்றிபெற வேண்டுமாயின் பொருளாதார வீழ்ச்சியில் குறிப்பிடத்தகு முன்னேற்றம் ஏற்பட வேண்டும். அதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி காலம் தாழ்த்தாது கிடைக்க வேண்டும். ஆனால், இவ்வாறான கிளர்ச்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால், பொருளாதார நிலைமை மேலும் சிக்கலடையும். ரணிலில் மீதான மக்கள் அவதானம் வீழ்ச்சியடையும். போராட்டங்களை திட்டமிடுபவர்களின் பிரதான இலக்கு இதுதான். அதேவேளை, ராஜபக்ஷக்களின் கூடாரத்துடன் இருப்பதும் ரணிலுக்கு சற்று பாதகமான விடயம்தான். ஏனெனில், அறகலயவின் பிரதான இலக்கு ராஜபக்ஷக்களை வீழ்த்துவதுதான். ஆனால், ரணிலின் மூலம் அவர்கள் மீண்டெழ முயற்சிப்பதான தோற்றம் காண்பிக்கப்பட்டால் மக்கள் அதனை எவ்வாறு நோக்குவர் என்னும் கேள்வியும் உண்டு.

ஆனால், இந்த விடயங்களில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் நிதானமாக இருக்க வேண்டும். யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த காலங்களில் பல செயல்பாடுகளை முன்னெடுத்திருந்தாலும்கூட, அவை எந்தவொரு தாக்கங்களையும் தமிழ் சமூகத்தில் ஏற்படுத்தவில்லை.

# எம். பி. அழைத்ததால் நோயாளியை இடையில் விட்டுச்சென்ற மருத்துவர்!

## மனித உரிமை குழுவில் முறைப்பாடு

*கொழும்பு, மார்ச் 15*

பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அழைக்கிறார் என்று கூறி, நோயாளியை பரிசோதித்து முடிக்காமல் இடையிலேயே சென்றார் என்று தனியார் மருத்துவ நிலைய மருத்துவர் மீது மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கிளிநொச்சி கிளை அலுவலத்தில் முறைப்பாட்டை பதிவு செய்தனர்.

நேற்று முன்தினம் இந்த சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

அக்கராயன்குளத்தை சேர்ந்த ஒருவர் நோய் வாய்ப்பட்ட தனது தாயாரை அழைத்துக் கொண்டு, நீண்ட தூரம் பயணித்து கிளிநொச்சிக்கு வந்ததாக முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள தனியார் மருத்துவ நிலையத்துக்கு சென்றதாகவும், மருத்துவரிடம் சிகிச்சைக்கு சென்ற போது, 5 நிமிடம் வரை தாயாரை பரிசோதித்து சில விடயங்களை சிட்டையில் எழுதினார்.

இடையிலேயே, “மன்னிக்கவும் சிறீதரன் எம்.பி கூட்டம் ஒன்றுக்கு வருமாறு அழைத்துள்ளார்”, என்று கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து மருத்துவர், நோயாளி மீதான பரிசோதனையை இடைநடுவில் விட்டுச் சென்றுள்ளார். இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர் கேள்வி எழுப்பியபோது, தரக்குறைவாக அவரை ஏசினார் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மைதானத்தில் நிலைகொண்ட இராணுவம் வெளியேறியது!

*கிளிநொச்சி, மார்ச் 15*

வன்னேரிக்குளம் வன்னொளி விளையாட்டு மைதானத்தில் இருந்து இராணுவத்தினர் வெளியேறி உள்ளனர்.

2009 ஆம் ஆண்டில் இருந்து வன்னொளி விளையாட்டுக் கழக மைதானத்தின் ஒரு பகுதியில் இராணுவத்தினர் நிலை கொண்டிருந்தனர். இதனால், விளையாட்டு போட்டிகளை நடத்தவும் மற்றும் நிகழ்வுகளை நடத்துவதிலும் சிக்கல்கள் ஏற்பட்டன.

மைதானத்திலிருந்து இராணுவத்தை வெளியேறுமாறு தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில்,வன்னேரிக்குளம் விளையாட்டு மைதானத்திலும் ஆனைவிழுந்தான் கிராமத்தின் இராணுவ முகாமுக்காக ஆக்கிரமிக்கப்பட்ட பெரு நிலப்பரப்புகளால் மக்களின் இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளதாக சி. சிறீதரன் எம். பி. சுட்டிகாட்டியிருந்தார்.

இந்த நிலையிலேயே, 14 வருடங்களின் பின்னர் வன்னேரிக்குளம் மைதானத்திலிருந்து இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர். (ஐ)

# தினேஷ் ஷாப்டர் மரணம் விசாரணை ஒத்திவைப்பு

*கொழும்பு, மார்ச் 15*

ஜனசக்தி குழுமத்தின் பணிப்பாளராக கடமையாற்றிய தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பான மேலதிக நீதிவான் விசாரணையை எதிர்வரும் 22ஆம் திகதி வரை ஒத்திவைக்க கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் நேற்று உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான நீதிவான் விசாரணை நேற்று நீதிமன்றில் நடைபெற்றபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த மரணம் தற்செயலானதா அல்லது கொலையா என்பதை தீர்மானிக்க ஐந்து பேர் கொண்ட விசேட மருத்துவ குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட தரப்பினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

(ஐ)

# 1,128 கிலோ பீடி இலைகளுடன் ஒருவர் புத்தளத்தில் கைது!


*புத்தளம், மார்ச் 15*

புத்தளம் மூக்குத்தொடுவாய் கரையோரத்தில் நேற்றுமுன்தினம் இரவு பீடி இலைகளை கடத்த முற்பட்ட ஒருவரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கடற்படைக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அத்துடன், அவரிடமிருந்து 36 உரப்பைகளில் இருந்து ஆயிரத்து 128 கிலோ பீடி இலைகள், 4 உரப் பைகளில் இருந்து 99 கிலோ செத்தல் மிளகாய், 8 உரப் பைகளில் இருந்து 129 கிலோ மல்லி என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், இவற்றை ஏற்றிச் செல்வதற்கு பயன்படுத்தப்பட்ட லொறியும் பிடிபட்டது. பிடிபட்ட இந்தப் பொருட்களின் பெறுமதி 2 கோடி ரூபாய்க்கும் அதிகம் என்று கூறப்படுகின்றது.

கைதானவர் நீர்கொழும்பை சேர்ந்தவர் என்றும் கைப்பற்றப்பட்ட பொருட்களை சுங்கப் பிரிவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
நீசந்திராஷ்டமம் இருப்பதால் பிரச்சினைகள் இணைத்துப் கோபப்பட்டு கொண்டிருக்காதீர்கள். வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவது நல்லது.

**இடபம்**
பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சூட்சுமங்களை புரிந்துக் கொள்வீர்கள். புது பொறுப்புகள் தேடி வரும். நன்மை கிட்டும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் வரவு உயரும். உத்தியோகத் தில் சவாலான வேலைகளையும் முடிப்பீர்கள்.

**கடகம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். வியாபாரத்தில் எதிர் பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**சிம்மம்**
பால்ய நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**கன்னி**
துணிச்சலாக சில முடிவுகள் எடுப்பீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள். பூர்வீக சொத்து பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். வெற்றிக்கு நாள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். பாதியில் நின்ற வேலைகள் முடிவடையும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். அதிகாரி உங்களை மதிப்பார்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் உங்களை அறியாமலே ஒருவித படபடப்பு தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். வியாபாரத்தில் லாபம் மந்தமாக இருக்கும்.

**தனுசு**
குடும்பத்தைப் பற்றிய சில கவலைகள் வந்து நீங்கும். ஆடம்பர செலவுகளால் சேமிப்புகள் கரையும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் வசூலிக்கப் பாருங்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**மகரம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத் தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். இனிமையான நாள்.

**கும்பம்**
உங்களின் அணுகுமுறைகளை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள்.

**மீனம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். உடல் நலம் சீராகும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத் தில் புது முதலீடு செய்வீர்கள்.

# சட்டம் ஒழுங்கை சீர்கெடுக்கும் செயலில் சில அரசியல் சக்திகள்!

## முதல்வர் ஸ்டாலின் குற்றச்சாட்டு

சென்னை, மார்ச் 15

வதந்தி பரப்பி, சட்டம் ஒழுங்கை கெடுக்க சில அரசியல் சக்திகள் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துகின்றன என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்தார்.

நேற்று நிகழ்வு ஒன்றில் பங்கேற்று பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

“கைபேசியில் அனைத்து புத்தகங்களும் கிடைக்கின்றன. எல்லா துறைகளிலும் தொழில்நுட்பம் புரட்சியை ஏற்படுத்தி வருகிறது. தமிழகத்தில் தகவல் தொழில் நுட்ப புரட்சிக்கு வித்திட்டவர் கருணாநிதி. தொழில்நுட்ப வளர்ச்சியால் கல்வி அறிவு விரல் நுனியில் வந்துவிட்டது. தகவல் தொழில்நுட்பம் சார்ந்த திட்டங்களில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. தகவல் தொழில்நுட்பதை மேம்படுத்த ஆலோசனை குழு அமைக்கப்பட்டுள்ளது. தரவுகள்தான் இந்த காலத்தின் முக்கிய எரி பொருள்.

வதந்தி பரப்பி, சட்டம் ஒழுங்கை கெடுக்க சில அரசியல் சக்திகள் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துகின்றனர். இளைய தலைமுறை தகவல் தொழில்நுட்பத்தை தங்களின் வளர்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் - என்றார். (ஐ)

# மருத்துவ கல்லூரி அரங்குக்கு அனிதாவின் பெயர் சூட்டல்!

சென்னை, மார்ச் 15

அரியலூர் அரசு மருத்துவ கல்லூரி அரங்குக்கு அனிதாவின் பெயர் சூட்டப்படும் என முதல்வர் மு. க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரியில் ரூ. 22 கோடி செலவில் அமைந்துள்ள அரங்குக்கு, நீட் தேர்வுக்கு எதிராகப் போராடி தன்னுயிரை மாய்த்த அரியலூர் மாணவி அனிதாவின் பெயர் சூட்டப்படும் என்று தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று அறிவித்தார்.

அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த அனிதா நீட் தேர்வை எதிர்த்துப் போராடினார். அதற்கான தீர்ப்பு சாதகமாக வராத நிலையில் 2017 செப்ரெம்பர் 1ஆம் நாள் தனது இன்னுயிரை மாய்த்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தலைமன்னார் - இராமேஸ்வரம் 7 இந்தியர்கள் நீந்திக் கடந்தனர்

இராமேஸ்வரம், மார்ச் 15

கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த 7 பேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இராமேஸ்வரத்தில் இருந்து விசைப்படகு ஒன்றில் இலங்கை தலைமன்னார் நோக்கி புறப்பட்டு சென்றனர். இவர்களுக்கு உதவியாக அந்த படகில் நீச்சல் பயிற்றுநர் மற்றும் மீனவர்கள் உள்ளிட்ட 9 பேரும் சென்றனர்.

தலைமன்னார் அருகே உள்ள கடல் பகுதியில் இருந்து ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணிக்கு கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த 4 ஆண்கள் மற்றும் 3 பெண்களும் தனுஷ்கோடி நோக்கி நீந்த தொடங்கினர். பிற்பகல் 3.45 மணிக்கு தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரை வந்தடைந்து தங்கள் நீச்சல் சாதனை பயணத்தை நிறைவு செய்தனர்.

தலைமன்னார் அருகே உள்ள கடல் பகுதியில் இருந்து தனுஷ்கோடி அரிச்சல்முனை வரை சுமார் 23 கிலோ மீற்றர் தூர பயணத்தை 10 மணி நேரம் 45 நிமிடத்தில் கடந்து சாதனை படைத்துள்ளனர். இதில் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த பிரசாந்த் (46), ராஜசேகர்துபர் (56), ஜெயபிரகாஷ் (56), சுமாரா (54) மஞ்சரி (46) சுஜாதா உள்ளிட்ட 7 பேர் இந்த சாதனையை படைத்துள்ளனர்.

இதில் ஒரே நேரத்தில் அனைவரும் நீந்தாமல் முதலில் ஒருவர் நீந்த தொடங்கி அவர் முடிக்கும் இடத்தில் இருந்து அடுத்த வீரர் நீந்த தொடங்குவார். இதே போன்று ஒரு வீரர் நீந்தி முடிக்கும் இடத்தில் இருந்து மற்றொரு வீரர் மீண்டும் நீந்தும் வகையிலான நீச்சல் பயிற்சியில் நீந்தி இந்த குழுவினர் தனுஷ்கோடி வரை நீந்தி வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அ. தி. மு. க. தலைமையை விமர்சிக்க வேண்டாம்!

## பா. ஜ. கவினருக்கு உத்தரவிட்ட தலைமை

சென்னை, மார்ச் 15

தமிழக பா.ஜ.க.வில் இருந்து சிலர் அ.தி.மு.க.வில் ஐக்கியமாகினர். இதையடுத்து பா. ஜ. க. நிர்வாகிகளை அழைத்து கட்சி நடத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அக்கட்சியின் தலைவர் கே.அண்ணாமலை விமர்சித்தார்.

மேலும், எடப்பாடி பழனிசாமியின் உருவப்படத்தை பா.ஜ.க.வினர் எரித்து போராட்டம் நடத்தினார்கள். இதனால் அ. தி. மு. க.- பா. ஜ. க. முக்கிய நிர்வாகிகள் இடையே கருத்து மோதல் ஏற்பட்டது. 2 கட்சி தொண்டர்கள் இடையே மனக்கசப்பையும் உண்டாக்கியது. மேலும் அ.தி.மு.க.-பா. ஜ.க. கூட்டணியில் சலசலப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், அண்மையில் தமிழகம் வந்த பா. ஜ. க.வின் தேசிய தலைவர் ஜே. பி. நட்டா அ.தி. மு.க. தலைமை குறித்தோ, தொண்டர்களை பற்றியோ யாரும் எந்தவித குறையும் சொல்ல வேண்டாம். இதனை தமிழக பா.ஜ.க. நிர்வாகிகளும், தொண்டர்களும் பின்பற்றி நடக்கவேண்டும். இதனை யாரும் மீறி நடக்கக்கூடாது என்று உத்தரவிட்டு சென்றுள்ளார். (ஐ)

# பொதுச் செயலாராகும் முனைப்பில் பழனிசாமி!

சென்னை, மார்ச் 15

உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி அ. தி. மு. க. எடப்பாடி பழனிசாமியின் தலைமையின் கீழ் வந்து விட்டது. அடுத்ததாக பொதுக்குழுவை கூட்டி பொதுச்செயலாளராவதற்கான வேலைகளில் எடப்பாடி பழனிசாமி தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

கட்சியின் உறுப்பினர்கள் தான் வாக்களித்து பொதுச்செயலாளரை தேர்வு செய்ய வேண்டும். எடப்பாடி பழனிசாமி இடைக்கால பொதுச்செயலாளரானதுமே புதிய உறுப்பினர் அட்டை தயார் செய்யப்பட்டது. எடப்பாடி பழனிசாமியின் படத்துடன் புதிய அட்டை தயார் செய்யப்பட்டது.

இலட்சக்கணக்கான அட்டைகள் தயார் செய்யப்பட்டு கட்சி அலுவலகத்தில் 2 அறைகளில் வைக்கப்பட்டுள்ளன. புதிய அட்டை மூலம் தேர்தல் நடத்தினால் சட்ட சிக்கல்கள் உருவாகலாம் என்பதால் பொதுச்செயலாளர் தேர்தல் முடிந்த பிறகு புதிய அட்டையை விநியோகிக்க திட்டமிட்டுள்ளதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்.

பொதுக்குழு கூட்டம் நடைபெறுவதற்கு ஒரு மாதம் முன்பே அறிவிப்பு வெளியிட வேண்டும். எனவே அடுத்த மாதம் (ஏப்ரல்) இறுதிக்குள் பொதுக்குழு கூட்டம் நடத்தப்படும்.

# சட்டவிரோதமாக குடியேற எவ்வித வாய்ப்பும் இல்லை



## இலங்கையருக்கு ஆஸி. எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 15

**இலங்கையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமாக குடியேறுவதற்கு எவ்வித வாய்ப்பும் இல்லை என இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் போல் ஸ்ரிபன்ஸ் தெரிவித்துள்ளார்.**

ஆபத்தை பொருட்படுத்தாமல் பலர் படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயற்சிப்பது குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

இதேநேரம் இலங்கையும் அவுஸ்திரேலியாவும் ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுப்பதற்காக தொடர்ந்தும் இணைந்து செயற்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக குடியேற முயற்சிப்பவர்கள் அங்கு செல்வதற்கு பூச்சிய வாய்ப்புக்கூட இல்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும் என்றும் அவுஸ்திரேலிய தூதுவர் கூறினார். (அ)

# பாண் விலை மேலும் குறைக்கப்படலாம்!



கொழும்பு, மார்ச் 15

பாணின் விலை மேலும் குறைவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக அகில இலங்கை பேக்கரிகள் உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை 15 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ள நிலையில், ஒரு இறத்தல் பாணின் விலையை 10 ரூபாயினால் குறைக்க சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எவ்வாறாயினும், டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி வலுவடைவதன் காரணமாக விலையை மேலும் குறைக்க முடியும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)



# நீதிமன்றத்தின் உத்தரவை அரசு நிறைவேற்றவேண்டும்

## கர்தினால் மல்கம் ஆண்டகை வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 15

52 நாள் ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கையின்போது உயர்நீதிமன்றத் தீர்ப்பை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தற்போது மட்டும் பாராளுமன்றம் ஊடாக நீதிமன்றத் தீர்ப்பைப் புறக்கணிக்கக் காரணம் என்னவென இலங்கை கத்தோலிக்க திருச்சபை கேள்வி எழுப்பியுள்ளது.

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றமும், அரசாங்கமும், ஜனாதிபதியும் கடமைப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு பாராளுமன்ற சிறப்புரிமைகளைக் கொண்டு உயர் நீதிமன்றத்தை அவதூறாகப் பேசும் உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.(அ)

# மக்களால் புறக்கணிக்கப்பட்ட ரணில் வாக்குரிமைக்குத் தடையாக உள்ளார்

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 15

மக்களால் புறக்கணிக்கப்பட்ட ஜனாதிபதி மக்களின் வாக்குரிமைக்கு தடையாக உள்ளார் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

மொனராகலை பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போராடியேனும் வாக்குரி மையை வெல்வோம்.

ராஜபக்ஷ குடும்பத்தினால் நாடு வங்குரோத்து நிலை அடைந்தது.

ராஜபக்ஷர்களை பாதுகாப்பதற்காகவே 134 உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தார்கள் - என்றார். (அ)

# நாட்டின் பொருளதார வளர்ச்சி மூன்று சதவீதத்தால் சுருங்கும்!

கொழும்பு, மார்ச் 15

மோசமான நிதி நெருக்கடியை இலங்கை கடந்து வரும் நிலையில், இந்த ஆண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி 3 சதவீதத்தால் சுருங்கும் என மூடிஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிதி நெருக்கடியானது அதன் அந்நிய செலாவணி கையிருப்பில் கடுமையான வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளபோதும், பொருளாதார வளர்ச்சி 2024 இல் மீண்டும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேநேரம், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெறப்படவுள்ள 2.9 பில்லியன் டொலர் கடன் இம்மாதம் 20 ஆம் திகதி அங்கீகரிக்கப்படலாம் என்றும் இது ஒரு சாதகமான வரவு என்றும் மூடிஸ் கூறியுள்ளது.

மேலும் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் இதனால் கடனாளிகளுக்கு இழுபறி ஏற்படலாம் என்றும் தெரிவித்துள்ள மூடிஸ், நீடித்த பேச்சுவார்த்தை வெளிப்புற நிதியுதவிக்கான அணுகலை ஆபத்தில் ஆழ்த்தலாம் எனவும் கூறியுள்ளது.

அத்தோடு தனியார் கடனாளிகளுக்கு அதிக இழப்புகள் ஏற்படக்கூடும் என்றும் மூடிஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

# ரூபா பெறுமதி உயர்வதாக கூறுவது கற்பனைக் கதை!

## சுனில் ஹந்துனெத்தி கூறுகிறார்




கொழும்பு, மார்ச் 15

டொலருக்கு நிகராக இலங்கை ரூபாயின் பெறுமதி உயர்வதாகக் கூறுவது அரசியல் நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு கற்பனை கதை என ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார்.

தேர்தலை நடத்தலாமா வேண்டாமா என்று முடிவு செய்யவும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மக்கள் கொந்தளிப்பைச் சமாளிக்கவும், மக்களை ஏமாற்றவும் இந்த கட்டுக்கதை பயன்படுவதாக அவர் கூறினார்.

அத்தோடு நாடு அபிவிருத்தி அடைந்து வருகின்றது என்றும் தற்போதைய அரசாங்கத்தை மாற்றவேண்டிய அவசியமில்லை என்றும்கூட கட்டுக்கதைகள் அவிழ்த்துவிடப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கருத்தில் கொண்டு மத்திய வங்கி முடிவுகளை எடுப்பதில்லை என்றும் இதிலும் அரசாங்கத்தின் உந்துதல் காணப்படுவதாகவும் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார். (அ)

# ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத் தேர்தலே வேண்டும்!

## எஸ்.எம்.சந்திரசேன வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 15

ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத்தேர்தலை நடத்தினால் சிறந்த மாற்றம் ஏற்படும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலை வெகுவிரைவாக நடத்த முழுமையான ஒத்துழைப்பு வழங்கத் தயார்.

அத்துடன், சவால்களை வெற்றிக்கொள்ள கூடிய வரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவோம்.

நெருக்கடியான சூழ்நிலையில் நாட்டு மக்களுக்காக சவால்களை பொறுப்பேற்பது உண்மையான தலைமைத்துவம்.

ஆகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சிறந்த தலைமைத்துவம் உள்ளது - என்றார். (அ)





# உள்ளூராட்சி சபைகள் மூலம் இனி புனரமைப்புப் பணிகள் மட்டுமே!

கொழும்பு, மார்ச் 15

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பயன்படுத்திய அனைத்து அரச சொத்துக்களையும் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் உரிய நிறுவனங்களிடம் ஒப்படைக்குமாறு உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு பின்னர் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நிறை வடைந்ததன் பின்னர், அவற்றின் நிர்வாகம், மாநகர ஆணையாளர்கள் மற்றும் பிரதேச சபை செயலாளர்களுக்கு மாற்றப்படும் என இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர குறிப்பிட்டார்.

எதிர்வரும் 19ஆம் திகதிக்கு பின்னர் உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக புனரமைப்புப் பணிகள் மாத்திரமே மேற்கொள்ளப்படும் என இராஜாங்க அமைச்சர் இதன் போது தெரிவித்தார். (அ)

# எதிர்காலத்தில் ஒழுங்கான அறிவிப்பு விடுக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படும்!

## ஜனாதிபதி ரணில் கூறுகிறார்



கொழும்பு, மார்ச் 15

“அறிவிப்பே இல்லாத உள்ளூராட்சி சபைத் தேர்தல், எதிர்காலத்தில் ஒழுங்கான அறிவிப்பு விடுக்கப்பட்டு நடைபெறும்.”

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிற்போடுவதற்கு அதிகாரிகளைத் தூண்டியதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு, நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளதாக எதிரணிகள் தெரிவித்துள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரும் அளவுக்கு அவர் என்ன தவறு செய்தார்? எதிர்க்கட்சியின் மிரட்டலுக்கு அவர் அடிபணியமாட்டார். மிரட்டலுக்கு அஞ்சிப் பதவியை விட்டு ஓடும் அரசியல்வாதி அவர் அல்லர். அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை வந்தால் அது தோற்கடிக்கப்பட்டே தீரும்.

அறிவிப்பே இல்லாத உள்ளூராட்சி சபைத் தேர்தல், எதிர்காலத்தில் ஒழுங்கான அறிவிப்பு விடுக்கப்பட்டு நடைபெறும்.

இந்நிலையில் உள்ளூராட்சி அமைச்சுப் பதவியைத் தன்னகத்தே கொண்டுள்ள பிரதமர் தினேஷ் குணவர்த்தனவைச் சீண்டிப் பார்ப்பதால் தேர்தல் நடைபெறும் என்று எதிரணியினர் கனவு காணக்கூடாது.

நாம் பெரும்பான்மைப் பலம் கொண்ட அரசு. அரசுக்கு எதிரான எதிரணியினரின் எந்தப் பிரேரணையும் வெற்றியடையாது - என்றார். (அ)

# முதல் இரு மாதங்களில் மட்டும் 8400 கைபேசிகள் திருட்டு

கொழும்பு, மார்ச் 15

நடப்பாண்டின் முதல் இரண்டு மாதங்களில், இலங்கையில் 8,422 கைத்தொலைபேசிகள் (ஸ்மார்ட்போன்கள்) திருடப்பட்டுள்ளன அல்லது தொலைந்து போயுள்ளதாக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தொலைந்த தொலைபேசிகளை மீட்பதற்காக பொலிஸார் 2018 டிசெம்பர் 31 ஆம் திகதி முதல் நிகழ்நிலை (ஒன்லைன்) முறையை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இதன்மூலம் தமக்கு மொத்தமாக 134,451 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்ததாக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, 2019 ஆம் ஆண்டில், 40,167 கைபேசிகளும் 2020 ஆம் ஆண்டில் 12,567 கைபேசிகளும், 2021 ஆம் ஆண்டில் 27,933 கைபேசிகளும் திருடப்பட்டுள்ளன அல்லது தொலைந்து போயுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைந்துபோன தொலைபேசிகள் குறித்து தமக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள், உரிய பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பப்படுவதாகவும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் மேனகா பத்திரன தெரிவித்தார். (அ)

# மன்னிப்பு கோரினார் ஹரீன்!



கொழும்பு, மார்ச் 15

சர்வதேச சுற்றுலா மற்றும் வர்த்தக கண்காட்சியில் மாலைதீவு தொடர்பில் வெளியிடப்பட்ட சர்ச்சைக்குரிய கருத்துக்காக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மன்னிப்பு கோரினார்.

“அழகான மாலைதீவுகள் தொடர்பாக பேர்ளினில் நான் கூறிய கருத்து, சமூக ஊடகங்களில் தவறாக சித்தரிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாவில் அண்டை நாடுகளுடன் இணைந்து செயல்படுகிறோம் என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன். மேலும் ஏதேனும் அசௌகரியம் ஏற்பட்டிருந்தால் மன்னிப்பு கேட்க விரும்புகிறேன்” என்று ஹரீன் பெர்னாண்டோ ருவீட் செய்துள்ளார்.

ஜேர்மனின் பேர்ளின் நகரத்தில் நடந்த சர்வதேச சுற்றுலா மற்றும் வர்த்தக கண்காட்சியில் உரையாற்றிய ஹரீன் பெர்னாண்டோ, மாலைதீவுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் சுற்றுலாப் பயணிகளுக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன’ என்றார்.

“நிறைய மக்கள் மாலைதீவுக்கு செல்வார்கள் என்பது எனக்குத் தெரியும். மாலைதீவுக்கு கடற்கரை இருக்கிறது. நான் விமர்சிக்கவில்லை. ஆனால் நீங்கள் ஐந்து நாட்கள் அங்கேயே இருங்கள். உங்களுக்கு அலுத்துவிடும். அவ்வளவுதான். நீங்கள் ஒரு தீவில் ஒரே இடத்தில் சிக்கிக் கொள்வீர்கள்,” என்று அவர் கூறினார்.

ஹரீனின் கருத்து மாலைதீவில் கடுமையான எதிர்ப்பை சம்பாதித்தது. மாலைதீவு அரசியல்வாதிகள், பிரமுகர்கள் மற்றும் சமூக ஊடக பிரபலங்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். (அ)

# விமலின் பிடியாணை விலக்கப்பட்டது!



கொழும்பு, மார்ச் 15

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்து அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று மீளப்பெற்றுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக கறுவாத்தோட்டம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பில் நீதிமன்றில் முன்னிலையாகாத காரணத்தினால் அவரை கைது செய்யுமாறு கொழும்பு பிரதான நீதவான் நேற்றுமுன்தினம் பிடியாணை பிறப்பித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் வீரவன்ஸ தனது சட்டத்தரணியுடன் பிரேரணை விண்ணப்பம் மூலம் நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

சுகயீனம் காரணமாக அவர் நீதிமன்றத்துக்கு வரமுடியவில்லை என பிரதிவாதியின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டு பௌத்த லோக மாவத்தையில் பிரதான வீதிகளை மறித்து மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியதோடு போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்ததற்காகவும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. (அ)

# தேர்தலை பிற்போடுவதற்கு யாரையும் தூண்டவில்லை!

## குற்றச்சாட்டை மறுக்கிறார் பிரதமர்

கொழும்பு, மார்ச் 15

“பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் எந்தப் பிரச்னையும் இல்லை. உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிற்போடுவதற்கு எந்த அரச அதிகாரியையும் நான் தூண்டவில்லை. எதிரணியினரின் ஆதாரமற்ற குற்றச்சாட்டை அடியோடு நிராகரிக்கின்றேன்.”

- இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலைப் பிற்போட அதிகாரிகளைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து பிரதமர் தினேஷுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பது தொடர்பில் எதிரணிகள் ஆலோசித்து வருவது தொடர்பில் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

எனக்கு எதிராக எந்தத் தரப்பு நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தாலும் அதனை எதிர்கொள்ள நான் தயாராகவுள்ளேன். பெரும்பான்மை இல்லாத நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் எனது பிரதமர் பதவியையோ அல்லது அமைச்சுப் பதவியையோ கவிழ்க்க முடியாது.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலைக் குழப்புவதோ - தேர்தலைப் பிற்போடுவதோ எனது நோக்கம் அல்ல. தேர்தல் உரிய நேரத்தில் நடைபெறும்.

நாட்டின் நிலைமை குறித்தும், மக்களின் நிலை தொடர்பிலும் அக்கறை இல்லாதவர்கள் வாய்க்கு வந்த மாதிரி உளறுவார்கள். அவர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்கக்கூடாது - என்றார். (அ)

# முன்னாள் பெண் போராளி வெளிநாடு செல்ல போலி ஆவணம் தயாரித்த பொலிஸார் கைது!

கொழும்பு, மார்ச் 15

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் பெண் போராளி ஒருவர் போலி ஆவணங்களுடன் வெளிநாடு செல்வதற்கு உதவிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த முன்னாள் பெண் போராளி , வெள்ளவத்தையில் உள்ள முகவரிக்கு போலி ஆவணங்களை உருவாக்கி வெளிநாடு செல்வதற்கு சந்தேக நபர் கான்ஸ்டபிள் உடந்தையாக இருந்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டில் இருந்து நாட்டுக்கு வந்தபோது கைது செய்யப்பட்ட குறித்த பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போதே இந்த விடயம் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்திற்குரிய கான்ஸ்டபிள் வாழைத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியவர் என தெரிவிக்கப்படுகிறது. (அ)

# தனியார் பல்கலை மருத்துவ மாணவர்களை பயிற்ற அரச வைத்தியசாலைகளை கண்டறிய விசேட குழு!

கொழும்பு, மார்ச் 15

அரச பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களின் மருத்துவப் பயிற்சிக்கு இடையூறு ஏற்படாத வகையில், ஏனைய பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களுக்கு மருத்துவப் பயிற்சிகளை வழங்குவதற்காக, போதனா வைத்தியசாலைகளாகப் பயன்படுத்துவதற்கு பொருத்தமான அரச வைத்தியசாலைகளை இனங்காண்பதற்கான குழுவொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

சுகாதார இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சீதா அரம்பேபொலவின் தலைமையில் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், வைத்தியர் நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை, லைசியம் கெம்பஸ் மற்றும் கொழும்பு, களுத்துறை, கம்பஹா, குருநாகல் மற்றும் பொலனறுவை ஆகிய பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படும் மருத்துவ மாணவர்களுக்காக போதனா வைத்தியசாலையாகப் பயன்படுத்துவதற்கு ஏற்ற அரச வைத்தியசாலைகள், ஆய்வு செய்தல், மீளாய்வு செய்தல், இனங்காணல் மற்றும் மருத்துவப் பயிற்சியை வழங்குவதற்கு உள்ள சாத்தியக்கூறுகள் என்பன தொடர்பில் இந்த குழு ஆராயவுள்ளது.

இதன்படி, இனங்காணப்படும் வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் தொடர்பில் பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும்.

அத்துடன் எட்டு வாரங்களுக்குள் இணங்கானல் மற்றும் பரிந்துரைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தகுழுவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

# ஆளுநர்களை கொழும்பு அழைத்துள்ளார் பிரதமர்!

## உள்ளூராட்சி சபைகள் குறித்து தீர்மானம் மேற்கொள்வதற்காக

**கொழும்பு, மார்ச் 15**

**அனைத்து ஆளுநர்களும் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.**

**அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

உள்ளூராட்சி மன்றங்களுக்கான பதவிக் காலத்தை ஒரு வருடத்துக்கு நீடித்து பிரதமரால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

இதற்கமைய எதிர்வரும் 19 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றங்களுக்கான பதவிக்காலம் நிறைவடையவுள்ளது.

இந்த நிலையில் உள்ளூராட்சி மன்றங்களின் எதிர் காலச் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாட மாகாண ஆளுநர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிகாலம் எதிர்வரும் 19 ஆம் திகதியுடன் நிறைவடைய உள்ளமையினால் உள்ளூராட்சி மன்றங்களை ஆணையாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# அரச வருமானம் அதிகரித்தால் மானியங்களை வழங்க முடியும்

## அமைச்சர் பந்துல கூறுகிறார்

*கொழும்பு, மார்ச் 15*

வரி சீர்திருத்தங்களினால் அரச வருமானம் அதிகரிக்கும் பட்சத்தில் மேலும் மானியங்களை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், அரச ஊழியர்களில் நூற்றுக்கு 10 வீதமானவர்கள் மாத்திரமே புதிய வரிசீர்த்திருத்தத்திற்கு உள்வாங்கப்படுவதாகக் குறிப்பிட்டார்.

புதிய வரிச்சீர்த்திருத்தத்தில் அரசாங்கத்திற்கு வருமானம் அதிகரித்தால், அனைத்து அரச ஊழியர்களுக்கும் மானியம் வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார். (அ)

# அத்தியாவசிய பொருட்களின் விலை மேலும் குறைவடையும்

*கொழும்பு, மார்ச் 15*

பண்டிகைக் காலத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலை மேலும் குறையும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதனூடாக இறக்குமதியாளர்களுக்கு பாதகமான நிலை ஏற்பட்டாலும் அதன் பயனைப் பொதுமக்களுக்கு வழங்குமாறு அவர் இறக்குமதியாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.(அ)

# துறைமுக போராட்டம் வெற்றியளித்துள்ளது!

*கொழும்பு, மார்ச் 15*

துறைமுகத்தில் நேரத்துக்கு பணிசெய்யும் நடவடிக்கை மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக துறைமுக தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

சட்டவிரோத பணி நடவடிக்கையால் துறைமுகத்துக்கு நூற்றிமுப்பது கோடிக்கும் மேல் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அதற்கான முழுப்பொறுப்பையும் அரசாங்கமே ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தி துறைமுக தொழிற்சங்கங்கள் நேற்று முன்தினம் முதல் நேரத்துக்கு பணி செய்யும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளன.

இந்நிலையில் இந்தப் போராட்டமானது வெற்றியளித்துள்ளதாக துறைமுக தொழிற்சங்க உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

தொழிற்சங்கப் போராட்டத்துக்கு உரிய பதில் கிடைக்காவிட்டால், இன்றைய தினம் துறைமுகத்தை மூட வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் துறைமுக தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்துரைத்த துறைமுக தொழிற்சங்க அதிகாரிகள்,

மெதுவாக பணிசெய்யும் நடவடிக்கையானது துறைமுகத்தில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தொழிற்சங்க போராட்டத்தை நேற்றைய தினமே ஆரம்பிப்பதற்கு தீர்மானித்தோம். மிகவும் வெற்றிகரமாக நேரத்துக்கு பணிசெய்யும் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

துறைமுகத்திலுள்ள 33 தொழிற்சங்கங்கள் ஒன்றாக இணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளதால் எமது போராட்டத்தை அரசாங்கத்தால் முறியடிக்க முடியாது.

எமது கோரிக்கை வெற்றியடையும்வரை இந்த போராட்டத்தை நாம் கைவிடப் போவதில்லை“ என்றனர்.

(அ)

# மரண அறிவித்தல்



# B.P.பாஸ்கரன்

**(எடிசன் கல்வி நிலைய அதிபர் - ஸ்தாபகர்)**

**பிறப்பு : 21.07.1967 இறப்பு : 14.03.2023**

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் 539A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைப் வசிப்பிடமாகவும் கொண்ட பாலச்சந்திரன் (பிரசாத்) பாஸ்கரன் நேற்று (14.08.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பாலச்சந்திரன் ( பிரசாத் ) – இராஜேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் கனகரத்தினம் – பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் அமிழ்தினியின் அன்புக் கணவரும் அஷ்வினியின் அன்புத் தந்தையும், குமாரசாமி – மீனாட்சி அவர்களின் அன்புப் பேரனும் சுதாகரன் (சிறி – கனடா), சசிகரன் (கனடா), சசிகலா (கனடா), சதீஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தமயந்தி, மஞ்சுளா, நெடுமாறான், தர்சினி, சிங்காரவேலன், அருணா, அனுசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் பாலமுரளி, நளாயினி, அரிகரராஜா ஆகியோரின் அன்பு சகலனும் தர்சிகன், சாருஜன், கனீஸ், சதுர்சன், விதுசன், சுஜீவன், அமிதா, தியாரா, சாயிரா, தக்ஷரா ஆகியோரின் அன்பு பெரியதந்தையும் கீர்த்திவர்மன், அபிலாஷ், அபிஷேக் ஆகியோரின் அன்பு மாமனாரும் குமாரசாமி கங்கைவேணியன்(வேணி – வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2023) புதன்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் பூதவுடல் அன்னாரின் கல்வி நிலையத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 3.00 மணியளவில் தனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*539A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

தகவல் :
**குடும்பத்தினர்**

*தொடர்புகளுக்கு:*

| | |
|---|---|
| **பரமநாதன் (சித்தப்பா)** | - 070 222 2911, 001 416 554 0911 |
| **பாலமுரளி (சகலன்)** | - 905 409 0932 |
| **அன்ரன் (மைத்துனர்)** | - 076 046 6709 |
| **கு.கங்கைவேணியன் (மாமா)** | - 077 161 1865 |
| **சதீஸ்கரன் (சகோதரன்)** | - 001 416 828 7081 |
| **நெடுமாறன் (மைத்துனர்)** | - 614 750 29112 |

# ஒஸ்கர் விருதை வென்ற எம்.எம்.கீரவாணி: மொழி எல்லைகளை கடந்த இசை சாதனையாளர்



உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்களை முணுமுணுக்க வைத்த 'நாட்டு நாட்டு' பாடல் கோல்டன் குளோபைத் தொடர்ந்து ஆஸ்கர் விருதை யும் வென்று அசத்தியுள்ளது. இந்த பாட லுக்கு இசையமைத்த இசையமைப்பாளர் எம்.எம்.கீரவாணி தெலுங்கில் மட்டு மின்றி, தமிழ், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளிலும் பல படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

ஆந்திராவின் மேற்கு கோதாவரி மாவட்டத்தில் 1961-ம் ஆண்டு ஜூலை 4-ம் தேதி பிறந்த இசையமைப்பாளர் எம்.எம்.கீரவாணியின் இயற்பெயர் கொடுரி மரகதமணி கீரவாணி என்பதாகும். அவரது தந்தையான சிவசக்தி தத்தா திரைப்பட பாடலாசிரியராக இருந்தவர்.

இசையின் மீதான காதலால் தனக்கு அந்த பெயரையே தந்தை சூட்டிவிட்டதாக எம்.எம்.கீரவாணி பல நேர்காணல்களில் கூறியுள்ளார். தந்தையால் இசை மீது ஆர்வத்தை வளர்த்துக் கொண்ட அவர், 2 ஆண்டுகளில் வயலின் கற்றுக் கொண்டிருக்கிறார்.

தெலுங்கில் முன்னணி இசையமைப்பாளர்களில் ஒருவராக திகழ்ந்த சக்கரவர்த்தியிடம் உதவியாளராக சேர்ந்ததன் மூலம் சினிமா வாழ்க்கையை கீரவாணி தொடங்கினார். 1990-ல் 'கல்கி" என்ற படத்துக்கு இசையமைத்தார். அந்தப் படம் வெளியாகவில்லை. அதே ஆண்டு மௌலி இயக்கத்தில் வெளியான 'மனசு மகாத்மா" என்ற தெலுங்கு படமே மரகதமணி இசையமைப்பில் வெளியான முதல் படமானது.

எம்.எம். கீரவாணியின் திரையுலக பயணத்தில் 1991-ம் ஆண்டு முக்கியமான ஒன்றாக அமைந்தது. அந்த ஆண்டு வெளியான 'சீதாராமையா காரி மனவராலு" திரைப்படம் பெரும் வரவேற்பைப் பெற்றது. அதே ஆண்டு ராம் கோபால் வர்மா இயக்கத்தில் வெளியான 'ஷனா ஷனம்" என்ற திரைப்படத்தின் மூலம் எம்.எம். கீரவாணி பெரும் புகழை அடைந்தார்.

அதன் பிறகு அவரது திரைப்பயணத்தில் தொடர்ந்து ஏறுமுகம்தான். தெலுங்கு திரைப்பட இசையுலகின் அசைக்க முடியாத மன்னராக அன்று முதல் அவரே திகழ்கிறார்.

மெலடி இசையே ரசிகர்களை கவரும், மெலடி பாடல்களே வெற்றிபெறும் சாத்தியங்கள் கொண்டவை என்று ஒரு நேர்காணலில் கீரவாணி குறிப்பிட்டார். துள்ளல் இசைப் பாடல்கள் நடனம், துடிப்பான இசை மூலம் வெற்றியடைகின்றன, ஆனால் மெலடிப் பாடல்களோ ரசிகர்களின் இதயத்தை வெல்கின்றன என்பது அவரது கருத்து.

தெலுங்கு, தமிழ், இந்தியில் அவரது இசையில் வெளியான பல பாடல்கள் கோடிக்கணக்கான ரசிகர்களின் மனங்களைக் கவர்ந்தவை.

### தமிழில் மரகதமணி என்ற பெயரில்…

1990-ம் ஆண்டு இயக்குநர் கே.பாலச்சந்தர் தனது 'அழகன்" படத்தின் மூலம் தமிழில் கீரவாணியை இசையமைப்பாளராக அறிமுகப்படுத்தினார். அந்தப் படத்தில் இடம் பெற்ற 'சங்கீத ஸ்வரங்கள் ஏழே கணக்கா', 'சாதி மல்லி பூச்சரமே' போன்ற காதல் மெலடி பாடல்கள் ரசிகர்களிடையே இன்றும் முணுமுணுக்கப்படுகின்றன. 'துடிக்கிறதே நெஞ்சம்" என்ற துள்ளல் இசைப்பாடல், 'கோழி கூவும் நேரம் ஆச்சு" என்ற கிராமியப் பாடல் என அனைத்து வகைகளிலும் அழகான பாடல்களைக் கொடுத்து முத்திரை பதித்தார்.

அதுமுதல் சில ஆண்டுகள் பாலச்சந்தர் தயாரிப்புகளுக்கும் அவர் இயக்கும் படங்களுக்கும் ஆஸ்தான இசையமைப்பாளராக மரகதமணி திகழ்ந்தார். 1992-ல் பாலச்சந்தர் இயக்கிய 'வானமே எல்லை" படத்திலும் இவர் கொடுத்த அனைத்து பாடல்களும் வெற்றிபெற்றன. பாலச்சந்தர் தயாரிப்பில் வசந்த் இயக்கத்தில் 'நீ பாதி நான் பாதி' படத்துக்கும், பாலச்சந்தர் இயக்கிய 'ஜாதி மல்லி" ஆகிய படங்களுக்கும் மரகதமணி இசையமைத்தார்.

அர்ஜூன் நடித்து இயக்கிய 'சேவகன்', 'பாட்டொன்று கேட்டேன்', 'கொண்டாட்டம்' ஆகிய மற்ற இயக்குநர்களின் படங்களுக்கும் அவர் இசையமைத்துள்ளார்.

மலையாளத்தில் அரவிந்த் ஸ்வாமி - சிறிதேவி நடித்த 'தேவராகம்" படத்துக்கு இசையமைத்தார். இந்தப் படம் தமிழிலும் வெளியானது. படம் வெற்றிபெறவில்லை என்றாலும் பாடல்கள் கவனம் பெற்றன.

தெலுங்கிலிருந்து மொழிமாற்றம் செய்யப்பட்டு வெளியான 'மாவீரன்', 'நான் ஈ", 'பாகுபலி", 'பாகுபலி 2" ஆகிய படங்களின் மூலம் தமிழில் 2ம் கிட்ஸ்கள் மத்தியில் அவர் அதிக பிரபலமடைந்தார்.

தெலுங்கில் எம்.எம்.கீரவாணி, தமிழில் மரகதமணி என்ற பெயரில் வெளிப்பட்ட இவர் பாலிவுட்டில் க்ரீம் என்ற பெயரில் இசையமைப்பாளராக பணியாற்றினார். 1994-ம் ஆண்டு கிரிமினல் என்ற படத்தின் மூலம் இந்தியில் அவர் அறிமுகமானார்.

2002-ம் ஆண்டில் வெளியான சர்: தி மெலடி ஆஃப் லைஃப் திரைப்படம் இவரை இந்தி ரசிகர்களிடையே வெகுவாக கொண்டு சேர்த்தது. அந்த படத்தில் இடம் பெற்ற அபிஜா… அபிஜா… என்ற பாடல் வட மாநிலங்களில் பட்டிதொட்டியெங்கும் ஒலித்தது.

2003-ம் ஆண்டு ஜிஸ்ம் படத்தில் இடம் பெற்ற மெலடி பாடல்கள் இந்தி ரசிகர்களை உருகச் செய்தன. ஜாடு ஹாய் நஷா ஹாய். ச்சலோ டும்கோ லெகர், ஆவார பன் ஆகிய பாடல்கள் இந்தி சினிமா ரசிகர்களால் திரும்பத் திரும்பக் கேட்கப்பட்டவையாக இருந்தன.

இந்தி பட ரசிகர்களின் உதடுகள், இவரது இசையில் உருவான டும் மைல் தில் கிலே, ஜாடு ஹாய் நஷா ஹாய் போன்ற பாடல்களை முணுமுணுக்காமல் இருந்திருக்கவே முடியாது.


2005-ம் ஆண்டு ஷாரூக் கான் நடிப்பில் வெளியான பஹெலி திரைப்படம் பெரிய அளவில் வெற்றி பெறவில்லை என்றாலும் படத்தின் இசை பேசப்படும் ஒன்றாக இருந்தது. அதில் இடம் பெற்ற தீரே ஜல்நா தீரே ஜல்நா பாடல் சூப்பர் ஹிட்டானது.

இந்தியில் 'கிரிமினல்', ஷாருக்கான் நடித்த 'பஹேலி', பிபாஷா பாசு நடித்த 'ஜிஸ்ம்' உள்பட 26 படங்களுக்கு அவர் இசையமைத்திருக்கிறார்.

### ராஜமௌலியுடன் இணைந்து சிகரம் தொட்ட கீரவாணி

இந்திய திரையுலகில் மாபெரும் இயக்குநராக உருவெடுத்துள்ள எஸ்.எஸ்.ராஜமௌலியின் அனைத்துப் படங்களுக்கும் எம்.எம்.கீரவாணியே இசையமைத்துள்ளார். இருவருமே நெருங்கிய உறவினர்கள் ஆவர். அதாவது, ராஜ மௌலியின் தந்தை விஜயேந்திர பிரசாத்தும், கீரவாணியின் தந்தை சிவசக்தி தத்தாவும் சகோதரர்கள்.

2001-ம் ஆண்டு ஸ்டூடென்ட் நம்பர் ஒன் திரைப்படத்தின் மூலம் தெலுங்கில் இயக்குநராக அறிமுகமான எஸ்.எஸ். ராஜமௌலியின் தொடர் வெற்றிகளில் எம்.எம்.கீரவாணியும் இணைந்தே பயணப்பட்டார். மகாதீரா, நான் ஈ, பாகுபலி, பாகுபலி-2 என இருவரது கூட்டணியில் வெளியான படங்களுக்கு ரசிகர்கள் அளித்த வரவேற்பு குறித்து சொல்லித் தெரிய வேண்டியதில்லை.




### பாகுபலி பெற்றுத் தந்த பெரும்புகழ்

2015-ம் ஆண்டு வெளியான பாகுபலி திரைப்படம் எஸ்.எஸ்.ராஜமௌலிக்கு மட்டுமல்ல, இசையமைப்பாளர் எம்.எம்.கீரவாணிக்கும் மிக முக்கியமான திரைப்படமாக அமைந்தது. விமர்சகர்களின் பாராட்டிலும் வசூலிலும் உலக சாதனை படைத்த 'பாகுபலி" படங்கள் மூலம் தேசிய, சர்வதேச கவனத்தை ஈர்த்தார். அந்த படத்தில் இடம் பெற்ற பாடல்கள் தெலுங்கு, தமிழ், மலையாளம், இந்தி என அனைத்து மொழிகளிலும் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தன.

அதன் பிறகு, இருவர் கூட்டணியில் வெளியான ஆர்.ஆர்.ஆர். திரைப்படமும் உலகம் முழுவதும் வசூல் வேட்டை நடத்த, அதில் இடம் பெற்ற பாடல்களும் பெருவெற்றி பெற்றன. குறிப்பாக, நாட்டு நாட்டு பாடல் இந்தியா மட்டுமின்றி, அமெரிக்க, ஐரோப்பிய கண்டங்களைச் சேர்ந்த மக்களையும் ஆட்டம் போட வைத்தன. இன்றும் கூட பலரும் அந்த பாடலுக்கு நடனமாடி இன்ஸ்டாகிராம், பேஸ்புக் போன்ற சமூக ஊடகங்களில் பதிவிட்ட வண்ணம் இருப்பதை பார்க்க முடிகிறது.

நாடு போற்றும் இசையமைப்பாளராக உயர்ந்துள்ள எம்.எம்.கீரவாணி பாடலாசிரியர், பின்னணி பாடகர், எழுத்தாளர் என்று பன்முகம் கொண்டவர். அவர் இசையமைத்த பல பாடல்களை அவரே பாடியும் இருக்கிறார். தெலுங்கு, சமஸ்கிரும் ஆகிய மொழிகளில் தேர்ந்த அவர், 15 தெலுங்கு படங்களுக்கு பாடல்களை எழுதியுள்ளார். தெலுங்கில் பிரபல பாடலாசிரியரான வெட்டூரி சுந்தர ராமமூர்த்தியே தனது குரு என்றும், அவரிடம் இருந்தே இலக்கியத்தைக் கற்றுக் கொண்டதாகவும் கீரவாணி கூறுகிறார்.

பாகுபலி படத்தில் இடம்பெற்றுள்ள ஒகா ப்ராணம், கன்னா நிடுரிஞ்சாரா, தன்டலய்யா ஆகிய 3 பாடல்களும் எம்.எம்.கீரவாணியின் கைவண்ணத்தில் உருவானவையே. ஆஸ்கரை வென்று பெருமை சேர்த்துள்ள ஆர்.ஆர்.ஆர். திரைப்படத்தில் ஜனனி என்று தொடங்கும் பாடலையும் அவர் எழுதியுள்ளார்.

இசையமைப்பாளர், பின்னணி பாடகர் என்பதைக் காட்டிலும் பாடலாசிரியர் என்று குறிப்பிடுவதையே பெருமையாக கருதுவதாக நேர்காணல் ஒன்றில் எம்.எம்.கீரவாணி கூறியுள்ளார். சிறந்த எழுத்தாளர் என்பதே எனக்கு மகிழ்ச்சி தருகிறது என்பதே அதற்குக் காரணம் என்கிறார் அவர்.

பல சிறுகதைகளையும் எழுதியுள்ள கீரவாணி, அவற்றைத் தொகுத்து புத்தகமாக வெளியிட திட்டமிட்டுள்ளார்.

தெலுங்கு திரைப்பட இசையுலகில் இன்று முடிசூடா மன்னனாக திகழும் எம்.எம்.கீரவாணிக்கு சிறப்பான இசைத் திறமைக்காக விருது கொடுத்து முதலில் கௌரவித்தது தமிழ்நாடுதான். 1991-ம் ஆண்டு அழகன் திரைப்படத்திற்காக தமிழ்நாடு அரசு சார்பில் சிறந்த இசையமைப்பாளர் விருது அளிக்கப்பட்டது.

1997-ம் ஆணடு அன்னமய்யா என்ற தெலுங்கு திரைப்படத்திற்காக அவருக்கு தேசிய விருது கிடைத்தது. சிறந்த இசைக்காக, ஆந்திர அரசு வழங்கும் நந்தி விருதுகளை 11 முறையும், தென்னிந்திய பிலிம் பேர் விருதுகளை 13 முறையும் அவர் வென்றிருக்கிறார்.

பாகுபலி-2 திரைப்படத்திற்காக சிறந்த பாடலாசிரியருக்கான பிலிம்பேர் விருதையும் அவர் பெற்றிருக்கிறார்.

ஆர்.ஆர்.ஆர். படத்தில் இடம் பெற்ற நாட்டு நாட்டு பாடலுக்காக அண்மையில் கோல்டன் குளோப் விருதை வென்ற எம்.எம்.கீரவாணி, தற்போது அதே பாடலுக்காக சிறந்த ஒரிஜினல் இசை பிரிவில் ஆஸ்கரையும் வென்று இந்தியாவுக்கு பெருமை சேர்த்துள்ளார். ●

# நெருக்கடி வேளைகளில் அடிப்படை கோட்பாடுகளை பின்பற்றவேண்டும்



கலாநிதி ஜெகான் பெரேரா

2022 தொடக்கத்தில் தீவிரமடையத் தொடங்கிய பொருளாதார நெருக்கடி அதன் உடனடித் தாக்கத்தை அரசியல் களத்தில் ஏற்படுத்தியது.பெருமளவு மக்கள் வீதிகளில் இறங்கி தொடங்கிய போராட்டங்கள் இறுதியில் பிரமாண்டமான மக்கள் வெள்ளமாக அதிகார பீடங்களுக்குள் பிரவேசித்தது. இப்போது ஒரு வருடம் கழித்து பொருளாதார நெருக்கடி கட்டுப்பாட்டுக்குள் வரும் அறிகுறிகளை காட்டத்தொடங்கியிருக்கிறது.

நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி சில நாட்களில் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதாக தெரிகிறது. அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் சவால்களை சமாளிக்கக்கூடிய உறுதியுடையதாக தன்னை காட்டிக்கொள்கிறது. ஆனால், வெற்றி நிலைபேறானதாக இருக்கவேண்டுமானால் அரசாங்கம் மூன்று துறைகளில் அதன் அணுகுமுறையை மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டியது அவசியமாகும்.

முதலாவதாக, தீர்மானிக்கப்படாத எதிர்காலத்தில் அல்ல, விரைவாக உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்படும் என்று அரசாங்கம் அறிவிக்கவேண்டும்.தேர்தல்கள் மக்கள் அல்லது அவர்களின் ஆட்சியாளர்கள் விரும்பும்போது நடத்தப்படுபடவேண்டியவை என்ற ஒரு போலியான வாதம் முன்வைக்கப்படுகிறது. தேர்தல்கள் ஜனநாயகத்தின் தவிர்க்கமுடியாத அங்கங்கள். உண்மையில் அந்த தேர்தல்கள் தேர்தல் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் ஏப்ரில் 25 ஆம் திகதி நடத்தப்படவேண்டியது அவசியமாகும்.

ஆனால், தேவையான நிதி வளங்களை அரசாங்கம் ஒதுக்கவேண்டியிருப்பதால் அந்த திகதியில் தேர்தல்கள் சாத்தியமா என்ற சந்தேகம் தொடருகிறது. உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு தேவையான பணம் அரசாங்கத்தின் ஒரு நாள் செலவினத்தையும் விட குறைவானது என்பதை அடிப்படையாக கொண்டு நோக்கும்போது தன்னிடம் பணம் இல்லை என்று அரசாங்கம் கூறுகின்ற காரணம் நம்பக்கூடியதாக இல்லை.

பிரச்சினைக்குரிய இரண்டாவது விவகாரம் நீதித்துறைக்கு சவால் விடுக்கும் அரசாங்கத்தின் செயலாகும். ஜனநாயக முறைமை என்பது ஆட்சிமுறையின் பல்வேறு நிறுவனங்களும் அவற்றின் அதிகாரங்களை பிரயோகிக்கும் விதங்களை ஒழுங்கமைப்பதற்கு அவசியமான தடுப்புக்களையும் சமப்படுத்தல்களையும் அடிப்படையாகக் கொண்ட முறைமையாகும். நீதித்துறை அரசின் மூன்று முக்கிய அங்கங்களில் ஒன்றாகும். அதன் அதியுயர் நிறுவனமான உயர்நீதிமன்றம் தேர்தல்களை தாமதிப்பதற்கு பணம் இல்லை என்ற காரணத்தை அரசாங்கம் கூறமுடியாது என்று கூறியிருக்கிறது. இந்த தீர்ப்பை மதித்து நடக்கவேண்டியது அவசியமாகும்.

அதை அலட்சியம் செய்வது ஆட்சி முறையில் நெருக்கடியை தோற்றுவிக்கும். ஏற்கெனவே பொருளாதார நெருக்கடியின் விளைவான சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டியிருக்கும் அரசாங்கத்துக்கு இது மேலும் பிரச்சினைகளை அதிகரிக்கும் என்பதுடன் இலங்கையில் முதலீடுகளை செய்ய முன்வரக்கூடியவர்களுக்கு எதிர்மறையான செய்தியொன்றை விடுப்பதாக அமையும். சட்டத்தின் ஆட்சி மதிக்கப்படாத ஒரு சூழ்நிலையில் தங்களது முதலீடுகளுக்கு பாதுகாப்பு இல்லாமல் போகக்கூடும் என்று அவர்கள் கவலையடைவார்கள். துரதிர்ஷ்டவசமாக திறைசேரிக்கு உத்தரவைப் பிறப்பித்த உயர்நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கு அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்கள் சவால் விடுப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

தற்போது இடம்பெறுகின்ற வீதிப் போராட்டங்களை பாதுகாப்பு படைகளைப் பயன்படுத்தி தடுப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளுடன் தொடர்புடையதே மூன்றாவது பிரச்சினைக்குரிய விவகாரமாகும். போராட்டங்களை நடத்துபவர்களுக்கு அவர்கள் வீதிகளில் இறங்கி சுதந்திரமாக ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கான உரிமையை அரசாங்கம் மறுக்கிறது. அத்தகைய போராட்டங்கள் மக்களின் வழமையான பொருளாதார வாழ்வை சீர்குலைக்கும் என்பதுடன் முதலீட்டாளர்களின் நம்பிக்கைக்கும் ஒரு தடையாக இருக்கும் என்று அரசாங்கம் காரணம் கூறுகிறது.

ஆர்ப்பாட்டங்களை செய்பவர்கள் பெரும்பாலும் தொழிற்சங்கங்களையும் அரசாங்க பல்கலைக்கழகங்களையும் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களின் ஆர்ப்பாட்டங்களை கலைக்க பொலிசார் கண்ணீர்ப்புகை பிரயோகத்தையும் நீர்ப்பீரங்கித் தாக்குதல்களையும் தடியடியையும் மேற்கொள்ளும் காட்சிகளை அனேகமாக தினமும் ஊடகங்களில் நாம் பார்க்கிறோம். இராணுவ உடையில் வந்தவர்கள் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொல்லுகளினால் தாக்குதல் நடத்தியதையும் ஊடகங்களில் காணக்கூடியதாக இருந்தது. சிவில் அமைதியின்மையை ஒடுக்குவதற்கு இராணுவத்தை பயன்படுத்துவது ஒரு சட்ட மீறலாகும். குறிப்பாக அண்மைய சம்பவத்தில் இராணுவ உடையில் வந்தவர்கள் அவர்களுக்குரிய அடையாளப் பட்டிகளை அணிந்திருக்கவில்லை. இது அவர்கள் கொடூரமாக் நடந்துகொண்டாலும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிச்செல்வதற்கான வாய்ப்பை கொடுக்கிறது.

## அமெரிக்க நிலைப்பாடு

படைபலத்தை பயன்படுத்தி ஆர்ப்பாட்டங்களை ஒடுக்குவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகள் பிரச்சினையை தீர்ககப்போவதில்லை. ஆர்ப்பாடடங்களில் ஈடுபட்டிருப்பவர்கள் அதை கைவிடுவதற்கான சாத்தியமில்லை. அவர்கள் நாட்டின் பொருளாதார மீட்சிக்காக பெரிய விலையை செலுத்தவேண்டியவர்கள் என்று எதிர்பார்க்கப்படும் சனத்தொகையின் அடிமட்டங்களில் உள்ள 80 சத வீதத்தினரைச் சேர்ந்தவர்கள்.

பொருளாதாரத்தை மறுசீரமைப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் சனத்தொகையின் வறிய பிரிவுகள் மீது விகித சமானமற்ற முறையில் சுமையை ஏற்றுகின்றன. இதை அண்மைய மின்கட்டண அதிகரிப்பில் காணக்கூடியதாக இருக்கிறது. சமூகத்தின் உயர்மட்டங்களில் இருப்பவர்களையும் விட அடிமட்டங்களில் உள்ளவர்களே மின்கட்டண அதிகரிப்பால் பெரிதும் பாதிக்கப்படுபவர்களாக இருக்கிறார்கள்.

ஆர்ப்பாட்டங்களை அடக்குமுறை வழிவகைகளின் ஊடாக வெற்றிகொள்வதற்கு முயற்சிப்பதற்கு பதிலாக அரசாங்கம் நாடு முகங்கொடுக்கின்ற பன்முகப் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கு அடிப்படைக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியமாகும். முதலில் அரசாங்கம் நாட்டின் ஆட்சிமுறையின் அடிப்படை ஜனநாயகம் என்பதை கருத்திற்கொள்ளவேண்டும். சட்டத்தின் பிரகாரம் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை நடத்துவது ஜனநாயகத்துக்கு எழுச்சியைக் கொடுக்கும்.

தேர்தல்கள் தொடர்பிலான சட்டங்களை அவமதிப்பது நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் அரசாங்கத்தின் நியாயப்பாட்டை அரித்துச் செல்கிறது. இதை இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் அண்மையில் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய சட்ட மகாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஷங் தெளிவாகக் கூறியிருந்தார்.

உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அமெரிக்க தூதுவர் அந்த தேர்தல்கள் சிவில் சமூக அமைப்புக்களு டன் பங்காளிகளாகச் சேர்ந்து மக்கள் தங்களது பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்திடம் நேரடியாக நியாயம் கேட்பதற்கான ஆற்றலை அவர்களுக்கு கொடுக்கும் என்று சொன்னார். நீதித்து றையினதும் ஆர்ப்பாட்டங்களைச் செய்வதற்கான உரிமையினதும் முக்கியத்து வத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

“உலகம் பூராவும் ஜனநாயகங்கள் நெருக்குதலுக்கு உள்ளாகியிருக்கின்றன. சட்டத்தின் ஆட்சி இல்லாமல் ஜனநாயகம் நிலைக்கமுடியாது. தங்களது அக்கறைகளுக்காக அமைதியான முறையில் குரல் கொடுப்பதற்கும் தங்களது அரசாங்கத்தில் பங்கேற்பதற்கும் ஒவ்வொரு இலங்கையருக்கும் உரிமைக்கு அமெரிக்கா வழங்கும் ஆதரவு அசைக்கமுடியாததாகும். அந்த உரிமைகளை உறுதிப்படுத்துகின்ற சுதந்திரமான தேர்தல்களைப் பொறுத்தவரை இலங்கை பெருமைக்குரிய வரலாற்றைக் கொண்டிருக்கிறது “ என்றும் அவர் தமதுரையில் கூறினார்.

## கொள்கைகள் மறுபரிசீலனை

தற்போதைய நெருக்கடியில் இருந்து பொருளாதாரத்தை மீட்டெடுத்து மீண்டும் அபிவிருத்திப் பாதையில் செல்வதற்கு இலங்கை நம்பிக்கையுடன் காத்திருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பின்னால் இருக்கும் பெரிய வல்லாதிக்க நாடாக விளஙகுவதால் அமெரிக்க தூதுவரின் கருத்துக்களை விசேட கவனத்துடன் பரிசீலிக்கவேண்டிய தேவை இருக்கிறது. உண்மையில் அரசாங்கம் அதன் பொருளாதார மறுசீரமைப்புக் கொள்கைகளையும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளையும் மறுபரிசீலனை செய்யவேண்டியது அவசியமாகும். அதற்கு அமெரிக்காவின் நல்லெண்ணத்தினால் உதவமுடியும்.

பொருளாதார மறுசீரமைப்பின் பிரதான சுமையை சனத்தொகையின் வறிய பிரிவுகள் மீது ஏற்றமுடியாது. உதாரணமாக, தற்போதைய வரிக்கட்டமைப்பு அதிகரிக்கப்பட்ட நேரடி வரிகள் மற்றும் மறைமுக வரிகள் மூலமாக நடுத்தர வர்க்கங்களை இரு தடவைகள் உறிஞ்சுகிறது. தனிநபர்கள் என்ற முறையிலும் குடும்பங்கள் என்ற வகையிலும் அந்த நடுத்தர வர்க்கங்கள் பொருளாதார நிலைத்தன்மையின் ஓரங்களில் நெருக்கடிகளுடன் வாழ்கிறார்கள். பொருளாதார மறுசீரமைப்பு திட்டத்தை மறுபரிசீலனை செய்யா விட்டால் இரண்டாவது அறகலயவில் அது நாட்டு மக்களை வீதிகளில் இறக்கக்கூடும்.

கடந்த வருட ஆரம்பத்தில் நாட்டுப்புறங்களில் உள்ள விவசாயிகளே முதலில் சிறிய குழுக்களாக ஆர்ப்பாட்டங்களை தொடங்கினார்கள். அவர்களைத் தொடர்ந்து கரையோரப் பகுதிகளில் உள்ள மீனவர்களும் அடுத்து மரவேலை செய்பவர்களும் இறுதியாக நகர மையங்களைச் சேர்ந்த நடுத்தர வர்க்கத்தவர்களும் இணைந்தார்கள். அதைப் போன்ற ஒரு தோற்றப்பாட்டை இன்று காணக்கடியதாக இருக்கிறது. தொழிற்சங்கங்களும் துறைசார் நிபுணத்துவ வர்க்கத்தவர்களும் உட்பட மேலும் மேலும் குழுக்கள் போராட்டங்களில் இணைகின்றார்கள்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை உரிய நேரத்தில் நடத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி தேர்தலுக்கான தேவை குறித்து அரசாங்கத்தை நம்பச்செய்வதற்கு எதிரணி அரசியல் கட்சிகளை ஓரணியில் கொண்டுவருவதற்கு அண்மையில் சிவில் சமூக அமைப்புக்கள் முன்முயற்சியொன்றை மேற்கொண்டன. வாக்குரிமையைப் பாதுகாப்பதற்கான சிவில் சமூகக் கட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் ஒன்றில் வைத்து ‘ வாக்களிப்பதற்கான உரிமையை பாதுகாப்பதற்கு பொதுமக்கள் பிரதிநிதிகளின் சூளுரை” என்ற ஆவணத்தில் கைச்சாத்திடுவதற்கு எதிரணியின் பிரதான அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகள் ஒன்றுகூடினார்கள். வேறுபட்ட கோட்பாடுகளையும் இனச்சார்புகளையும் கொண்ட அரசியல் கட்சிகளாக அவை இருந்தபோதிலும் ஜனநாயக வாக்குரிமையை பேணிப்பாதுகாக்கவேண்டிய கடமையில் ஒன்றாக நின்றன.

நீதித்துறையின் தீர்ப்புக்களையும் சட்டத்தின் ஆட்சியுடன் தொடர்புடைய அரசியலமைப்பு ஏற்பாடுகளையும் அரசாங்கம் மதித்து நடக்கவேண்டியது அவசியமாகும்.உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பெற அது இன்றியமையாததாகும். அத்தகைய நம்பிக்கை இல்லாமல் பொருளாதார மீட்சிக்கான வாய்ப்புக்கள் அறவே நடைமுறைச் சாத்தியமில்லை. அரசாங்கத்தின் கொள்கைகள் தெளிவானவையாக இருப்பதையும் நாட்டில் சட்டத்தின் ஆட்சி நிலவுகிறது என்பதையும் அறிய முதலீட்டாளர்கள் அக்கறை காட்டுவார்கள்.

பொருளாதார மறுசீரமைப்புத் திட்டம், தேர்தல்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கான சுதந்திரம் போன்ற முக்கியமான பிரச்சினைகளில் மக்களினதும் எதிரணி அரசியல் கட்சிகளினதும் சிவில் சமூகத்தினதும் குரல்களுக்கு அரசாங்கம் செவிமடுக்கவேண்டியதும் கூடுதல் முக்கியத்துவமுடையதாகம். இவர்களிடம் இருந்து தனிமைப்பட்டால் அது அரசாங்கம் முழுமையாக நாட்டம் கொண்டிருக்கின்ற பொருளாதார மீட்சிக்கும் அரசியல் உறுதிப்பாட்டுக்கும் உகந்ததல்ல. அரசாங்கத்தின் அபிவிருத்தி மூலோபாயங்களுக்கு சமூகத்தின் மனமுவந்த ஒத்துழைப்பு தேவை. இல்லையானால் சஞ்சலமான ஒரு அமைதியே நிலவும். அதனால் நாடு துரிதமான பொருளாதார வளர்ச்சிப்பாதையில் பயணத்தை முடுக்கிவிடுவதற்கு தேவையான வெளிநாட்டு முதலீடுகளை கொண்டுவர முடியாது.

●

# தேசிய மக்கள் சக்தியின் போராட்டம் கல்முனையில்

நிந்தவூர், மார்ச் 15

கல்முனை மாநகர சபையில் இடம்பெற்றுள்ள நிதி மோசடி மற்றும் நாட்டு மக்கள் எதிர் நோக்கியுள்ள பல்வேறு பிரச்னை களுக்கு காரணமான அரசைக் கண்டித்து தேசிய மக்கள் சக்தி யின் ஆர்ப்பாட்டம் ஒன்று கல் முனை மாநகரில் இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் கல் முனைத்தொகுதி கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம், தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினரும், கல் முனைத் தொகுதி அமைப்பாள ருமான ஏ.ஆதம் பாவா தலைமை யில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபையில் இடம்பெற்றுள்ள ஊழல், நிதி மோசடி உட்பட நாட்டில் மின்கட்டண உயர்வு, வரிச்சுமை உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தவிடாது ஏற்படுத்தப்பட்டு வரும் உயர்மட்டத் தடைகள், விலைவாசி உயர்வு என்பவற் றைக் கண்டித்தே இந்த ஆர்ப் பாட்டம் இடம்பெற்றது.

கல்முனை பஸ்நிலையத்திற்கு அருகிலும், மாநகர மேயர் அலு வலகம் மற்றும் பொது நூலக வளாக முன்றலிலும் சுமார் ஒரு மணி நேரம் இந்த கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

திருடர்கள் - 23 வருட திருடர்கள் "முதல்வர், முதல்வர் பதவி விலக வேண்டும்" "கணக் காளர், கணக்காளர் பதவி விலக வேண்டும்" கொள்ளையடித்த பணத்தை திருப்பிக்கொடு" மக் களே திருடர்களை விரட்டுங்கள்" "வாழ்க்கைச் செலவுவான் அளவு, ரணிலின் வாழ்க்கை உச்ச அளவு" "வரிச்சுமையும் எல்லையில்லை, வாழ்க்கைச் செலவும் உச்சநிலை" தேர்தலை நடத்து, ஜனநாயகத் திற்கு வேட்டுவைக்காதே - என் பன போன்ற கோஷங்களை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண் டோர் எழுப்பியதுடன், இந்த வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளையும் ஏந்தியிருந்த னர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் தேசிய மக்கள் சக்தி யின் அம்பாறை மாவட்ட செயற் குழு உறுப்பினரும், கல்முனைத் தொகுதி அமைப்பாளருமான ஏ.ஆதம்பாவா கருத்து வெளியி டுகையில்,

"கல்முனை மாநகர சபையில் இடம் பெற்றுள்ள நிதி மோசடி, ஊழல் தொடர்பில் சம்பந்தப் பட்ட சகலரும் நீதியின் முன் நிறுத்தப்பட்டு மக்கள் பணம் மீளப்பெறப்படுவதுடன், உரிய தண்டனையும் வழங்கப்பட வேண்டும்.

மக்களின் பணம் மூன்று கோடிக்கு மேல் சூறையாடப்பட் டுள்ளதாகத் தகவல்கள் வெளியா கியுள்ளன. 1994 ஆம் ஆண்டு முதல் மாநகர சபையின் ஆட்சி அதிகாரத்தை வைத்திருக்கும் முஸ்லிம் காங்கிரஸ்/ம் இது விடயத்தில் மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டும்.

இந்த நிதிமோசடியின் பின்ன ணியில் செயற்பட்டவர்களையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவர வேண்டும்.

இதேவேளை மக்கள் தமது ஜனநாயக உரிமைகளைக் கோரி நிற்கும் நிலையிலும், ஐக்கிய மக்கள் சக்தியின் பக்கம் மக்கள் அலை அலையாகத் திரண்டு வருவதைக் கண்ட அச்சத்தி லுமே ஜனாதிபதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப் பிற்போடு வதற்கு பகீரதப்பிரயத்தனங் களை முன்னெடுத்துள்ளார்" எனத் தெரிவித்தார். (அ-06)

# மலையகத்தில் முட்டை தட்டுப்பாடு!

கொழும்பு, மார்ச் 15

ஹற்றன் உள்ளிட்ட மலைய கத்தின் பல பகுதிகளில் முட் டைக்கான தட்டுப்பாடு நிலவு வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முட்டைகளை சில்லறை மற்றும் மொத்த விலையில் விற் பனை செய்யும் வர்த்தகர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடு பட்டுள்ளமையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

முட்டை உற்பத்தியாளர்கள் நிர்ணய விலையை விட அதிக விலைக்கு முட்டையை விற் பனை செய்வதனால் தாமும் வர்த்தக நடவடிக்கைகளிலி ருந்து விலகியுள்ளதாக முட்டை வர்த்தகர்கள் தெரிவித்தனர். (அ)

# மைத்திரியின் நீதிப்பேராணை மனுவை விசாரிக்கத் தீர்மானம்



கொழும்பு, மார்ச் 15

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன வினால் தாக்கல் செய்யப்பட் டுள்ள நீதிப்பேராணை மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அருட்தந்தை சிறில் காமினி உள்ளிட்ட இருவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தனிப்பட்ட முறைப்பாடு தொடர்பிலான மனுவை செல்லுப்படியற்ற தாக்குமாறே குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஐவர் அடங்கிய நீதிய ரசர்கள் குழாமிற்காக மேன் முறையீட்டு நீதிமன்றின் சிரேஷ்ட்ட நீதியரசர்களை நிய மிக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என மேன் முறையீட்டு நீதிமன்றின் தலைவர் பந்துல கருணாரத்ன அறிவித்துள்ளார்.

அத்துடன் முன்னாள் ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன வினால் தாக்கல் செய்யப்பட் டுள்ள ரிட் மனுவினை விசா ரணை செய்து தீர்ப்பை அறிவிக்கும் வரை, அவருக்கு எதிராக கோட்டை நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப் பட்டுள்ள தனிப்பட்ட முறைப் பாடுகளை விசாரணைகளுக்கு உட்படுத்தாமல் நிறுத்தி வைக்குமாறும் மேன்முறை யீட்டு நீதிமன்றினால் கோட்டை நீதவான் நீதிமன்றின் நீதவானுக்கு உத்தரவிடப்பட் டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகிய நீதியரசர்கள் குழாமினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தன்று தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக புலனாய் வுப் பிரிவிடமிருந்து தகவல் கிடைக்கப்பெற்றும் அதனைப் பொருட்படுத்தாது கடமையி லிருந்து தவறியதாக அருட் தந்தை சிறில் காமினி உள் ளிட்ட இருவரால் கோட்டை நீதவான் நீதிமன்றில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது.

குறித்த முறைப்பாட்டினை ஆராய்ந்த நீதவான் நீதிமன்றம் சந்தேக நபரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவை நீதிமன்றில் முன்னி லையாகுமாறும் அறிவிப்பு விடுத்துள்ளது.

குறித்த அறிவிப்பு சட்டத் திற்கு முரணாக விடுக்கப்பட் டுள்ளதாகவும், அதனை செல்லுப்படியற்றதாக்குமாறும் தெரிவித்து முன்னாள் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன வினால் குறித்த நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

கல்வி tv CHANNEL-1

**15.03.2023**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**15.03.2023**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# அரசு கொடுக்கும் மானியத்தை பிரித்து வழங்க இராஜாங்க அமைச்சர் அதிகாரம் தேவையில்லை

## சுட்டிக்காட்டுகிறார் கோவிந்தன் கருணாகரம்



மட்டக்களப்பு, மார்ச் 15

**இராஜாங்க அமைச்சர் என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி எங்கள் மேய்ச்சற்தரையைக் காப்பாற்றுங்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் பறிபோய்க் கொண்டிருக்கும் காணிகளைக் காப்பாற்றுங்கள். சோலர் திட்டத்திற்காக அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் 280 ஏக்கர் காணியைக் காப்பாற்றி அந்த மக்களுக்கு வழங்குங்கள். உங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டியது இதற்காகவே ஒழிய அரசாங்கம் கொடுக்கின்ற மானியங்களை பிரித்துக் கொடுப்பதற்கு இராஜாங்க அமைச்சர் என்ற அதிகாரம் தேவையில்லை. அதனை அரச அதிகாரிகள் நேர்த்தியாகச் செய்வார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்தார்**

அவர் மேலும் தெரிவிக்கையில் - உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடக்குமோ நடக்காதோ என்ற எண்ணப்பாட்டுடன் ஒத்திப் போடப்பட்டு மீண்டும் திகதி அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அந்தத் திகதியில் கூட நடத்தப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் மாத்திரல்லாமல், அரச அதிகாரிகள், தேர்தல்கள் ஆணையகத்துக்குக் கூட இருக்கின்றது. அந்த சந்தேகத்துடனேயே திகதியும் அறிவிக்கப்பட்டிருப்பதாக அறியக்கூடியதாக இருக்கின்றது.

ஒரு ஜனநாயக நாட்டில் தேர்தல்கள் ஒத்திப்போடப்படுவதென்பது யாராலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது. எதிர் வரும் 28 தொடக்கம் முதலாம் திகதி வரை தபால்மூல வாக்கெடுப்பு நடைபெற இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஏப்ரல் 25ஆம் திகதி தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இருப்பினும் 15ஆம் திகதிக்கிடையில் பணம் தரப்படாவிட்டால் குறிப்பிட்ட திகதிக்குள் வாக்குச்சீட்டுகளை அடித்துக் கொடுக்க முடியாது என்று அரச அச்சகர் தெரிவித்திருக்கின்றார். இவற்றையெல்லாம் பார்க்கும் போது உண்மையில் இந்த அதிகாரிகளும் அரசாங்கமும், நாட்டின் ஜனாதிபதியும் ஏற்கனவே நொந்துபோயுள்ள மக்களை ஏமாற்றிக் கொண்டிருப்பதாகவே இருக்கின்றது.

தற்போது நாட்டில் ஜனநாயகப் போராட்டங்கள் வெடித்துக் கொண்டிருக்கின்றன. அரசியற் கட்சிகள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழிற்சங்கங்கள் எனப் பல்வேறு தரப்பினரால் போராட்டங்கள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. இந்தப் போராட்டங்களை இரும்புக் கரம் கொண்டு அரசு அடக்கிக் கொண்டு வருகின்றது.

இந்தப் போராட்டங்களை கடுமையாக அடக்கினால் எதிர்கால விளைவுகள் பாரதூரமாக இருக்கும். கடந்த காலங்களில் தமிழ் மக்களின் அகிம்சை ரீதியான போராட்டங்களை இரும்புக் கரம் கொண்டு அடக்கிய காரணத்தினாலேயே ஆயுதப் போராட்டம் வெடித்தது. அவ்வாறானதொரு நிலைமைக்கு மீண்டும் இந்த நாட்டை அரசு கொண்டு செல்லக்கூடாது என்பது எமது பணிவான வேண்டுகோள்-என்றார்.

(அ)

# திருகோணமலையில் அமெரிக்கக் கப்பல் !



திருமலை, மார்ச் 15

திருகோணமலை துறைமுகத்திற்கு வருகை தந்த அமெரிக்கக் கடற்படையின் சால்ர்ஸ்டன் 18 என்ற கப்பல் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளது.

குறித்த கப்பல் திருகோணமலை துறைமுகத்திற்கு கடந்த 11ஆம் திகதி வந்த நிலையில் நேற்று முன் தினம் புறப்பட்டுச் சென்றுள்ளதாகக் கூறப்பட்டது.

சுமார் 127.4 மீற்றர் நீளமுள்ள இந்தக் கப்பலில் 100 பேர் பயணித்துள்ளனர்.

திருகோணமலை துறைமுகத்திற்கு வருகை தந்த கப்பலின் கட்டளை அதிகாரி, கிழக்கு கடற்படை கட்டளைத் தளபதியைக் கிழக்கு கடற்படை கட்டளைத் தலைமையகத்தில் சந்தித்தார்.

(அ)

# விழிப்புலனற்றோர் கிரிக்கெட் இரத்மலானை அணி சம்பியன்



மட்டக்களப்பு, மார்ச் 15

விழிப்புலனற்றோர் சங்கத்தின் 25ஆவது ஆண்டு வெள்ளி விழாவை முன்னிட்டு கிழக்கு மாகாண பிரிலியண்ட் மற்றும் கொழும்பு இரத்மலானை பார்வையற்றோர் கிரிக்கெட் அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற ஒலிப்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இரத்மலானை பார்வையற்றோர் கிரிக்கெட் அணி சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

இந்த கிரிக்கெட் சுற்றுப்போட்டி மட்டக்களப்பு சிவாநந்தா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இரத்மலானை அணி கிழக்கு மாகாண அணியை துடுப்பெடுத்தாடுமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க கிழக்கு மாகாண அணி 15 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 94 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொழும்பு அணி 14.2 ஓவர்களில் 95 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக இரத்மலானை அணித் தலைவர் திமுத்த பெரேரா தெரிவு செய்யப்பட்டார்.

இப்போட்டிக்கு கிழக்கு மாகாண பொதுச்சபை ஆணைக்குழுச் செயலாளர் எம்.கோபாலரெத்தினம் பிரதம விருந்தினராகவும், மன்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் சிறப்பு விருந்தினராகவும், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.அருள்மொழி மற்றும் மட்டக்களப்பு இராம கிருஷ்ண மிஷன் முகாமையாளர் சுவாமிஜி நீலமாதவானந்தர், சங்கத்தின் ஆலோசகரும் கிழக்கு மாகாண அணி பயிற்றுவிப்பாளருமான ரி.விநாயகமூர்த்தி ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

(அ)

# மர்மப்பொருளால் பரபரப்பு



அம்பாறை, மார்ச் 15

கடற்கரைப் பகுதியில் மண்ணில் புதையுண்ட நிலையில் மர்மப்பொருள் ஒன்று இனங்காணப் பட்டுள்ளது.

குறித்த மர்மப்பொருள் தொடர்பாக அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை கடற்கரைப்பகுதில் இனங்காணப்பட்ட குறித்த மர்மப்பொருள் குறித்து விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் வழங்கிய தகவலுக்கமைய குறித்த மர்மப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. (அ)

# கடலரிப்பு குறித்து ஆராய்வு

அம்பாறை, மார்ச் 15

நிந்தவூர் அட்டைப்பள்ளம் பிரதேசத்தில் ஏற்பட்டு வரும் கடலரிப்பு சம்பந்தமாக அப்பிரதேசத்திலுள்ள தோட்ட உரிமையாளர்கள், ஹோட்டல் உரிமாயாளர்கள், மீனவர்கள் மற்றும் பொது மக்கள் இணைந்து நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிருடன் கலந்துரையாடல் ஒன்றை கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்திருந்தனர்.

இக் கலந்துரையாடலில் அட்டைப்பள்ளம் ஸ்ரீ சித்தி வினாயகர் ஆலயத்தினால் மஹஜர் ஒன்றும் தவிசாளரிடம் கையளிக் கப்பட்டிருந்தது.



இது தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ உதவிப்பனிப்பாளரை உடனடியாக அனுகி இவ்வனர்த்தம் குறித்து தெரியப்படுத்துவதுடன் கரையோர பாதுகாப்பு தினைக்கள அதிகாரிகளை நேரில் அழைத்து இக்கடலரிப்பிற்கான நிரந்தர தீர்வு நோக்கிய நகர்வுகளை தான் அவசரமாக முன்னெடுப்பதாக தவிசாளர் தாஹிர் தெரிவித்தார். (அ)

# மீன்பிடி, விறகு விற்பனைத் தொழில் புரியும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உதவி



மட்டக்களப்பு, மார்ச் 15

மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஈரளக்குளம் , பெரியவட்டவான், இலுக்கு ஆகிய கிராமங்களில் மீன்பிடி தொழில் மற்றும் விறகுத் தொழில் புரியும் தெரிவு செய்யப்பட்ட 10 பயனாளிகளுக்கான சைக்கிள்கள் நேற்று வழங்கப்பட்டன.

இலண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் நிதி உதவியுடன் ஏறாவூர்பற்று - செங்கலடி பிரதேச செயலகத்தின் ஊடாக இவ் உதவித் திட்டம் வழங்கப்பட்டது.

செங்கலடி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் இந்த சைக்கிள்களை வழங்கினார். (அ)

# அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் திட்டத்தில் அமெ., இங்கிலாந்து, ஆஸி. உடன்பாடு!



நியூயோர்க், மார்ச் 15

அணுசக்தியில் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களை உருவாக்கும் திட்டத்தின் புதிய விவரங்களை அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் தலைவர்கள் வெளியிட்டுள்ளனர்.

அவுக்கஸ் ஒப்பந்தத்தின் கீழ், அவுஸ்திரேலியா முதலில் மூன்று அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை அமெரிக்காவிடமிருந்து பெறவுள்ளது.

பிரித்தானியாவின் ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனம் தயாரித்த உலைகள் உட்பட அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒரு புதிய கடற்படையை உருவாக்க குறித்த நட்பு நாடுகள் இணைந்து செயல்படவுள்ளன.

இந்த ஒப்பந்தம் இந்திய-பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கை எதிர்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இது தொடர்பில் கலிபோர்னியாவில் ஏனைய இரு நாட்டு தலைவர்களுடன் பொது வெளியில் கருத்துரைத்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், படகுகளில் அணு ஆயுதங்கள் இருக்காது என்றும், அணுசக்தி இல்லாத நாடாக இருப்பதற்கான அவுஸ்திரேலியாவின் உறுதிப்பாட்டை இது பாதிக்காது என்றும் வலியுறுத்தினார்.

மூன்று நாடுகளும் பிராந்தியத்தில் சுதந்திரமாக இருப்பதை உறுதி செய்வதில் தாம் உறுதியாக இருப்பதாகவும் அமெரிக்க ஜனாதிபதி பைடன் தெரிவித்துள்ளார்.

இந்த புதிய அறிவிப்பின் ஒரு பகுதியாக, அமெரிக்கா தமது நீர்மூழ்கிக் கப்பல் கட்டுமானத் திறனைக் கட்டியெழுப்புதல் உள்ளிட்ட விடங்களின் பராமரிப்பை மேம்படுத்துவதற்காக அடுத்த சில ஆண்டுகளில் மொத்தமாக 4.6 பில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிடவுள்ளது. (அ)

# இத்தாலி நடுக்கடலில் சிக்கி தவித்த 1,300 அகதிகள் பாதுகாப்பாக மீட்பு!

ரோம், மார்ச் 15

இத்தாலியில் 1,300இற்கும் அதிகமான குடியேறிகள் மீட்கப்பட்டுள்ளனர். இத்தாலியக் கடலோரக்காவல் படை 3 படகுகளை மீட்டுத் துறைமுகங்களுக்குக் கொண்டு வந்தது. 2 வாரங்களுக்கு முன் இத்தாலியை நோக்கி வந்த படகு முறிந்ததில் குறைந்தது 74 குடியேறிகள் உயிரிழந்த சம்பவத்தின் பின் இது நிகழ்ந்துள்ளது.

இத்தாலியை நோக்கி இவ்வாண்டு இதுவரை 17,000க்கும் அதிகமான குடியேறிகள் வந்துள்ளனர்.

கடந்த ஆண்டின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இது 3 மடங்கு அதிகம்.

குடியேறிகள் பெரும்பாலும் ஆப்கானிஸ்தான், சிரியா, எகிப்து, பங்ளாதேஷ் ஆகிய நாடுகளிலிருந்து வருகின்றனர்.

ஆட்கடத்துபவர்களுக்குக் கடுமையான சிறைத்தண்டனையை இத்தாலிய அரசாங்கம் அறிமுகம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நேபாள ஜனாதிபதியாக பதவியேற்றார் பௌடேல்!

காத்மண்டு, மார்ச் 05

நேபாளத்தின் புதிய ஜனாதிபதியாக, நேபாள காங்கிரஸ் கட்சியின் ராம் சந்திர பௌடேல் பதவியேற்றார்.



நேபாளத்தின் புதிய ஜனாதிபதியாக எதிர்க்கட்சியான நேபாள காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் ராம் சந்திர பௌடேல் வியாழக்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டார். நேபாளத்தின் தற்போதைய ஜனாதிபதி வித்யாதேவி பண்டாரியின் பதவிக் காலம் நேற்று முன்தினம் நிறை வடைந்தது.

அவருக்கு பதிலாக அடுத்த ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில், பாராளுமன்றத்தில் பெரிய கட்சியாக விளங்கும் நேபாள காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக, சாதாரண பின்புலத்தைக் கொண்ட ராம் சந்திர பௌடேல் போட்டியிட்டார். அவரை எதிர்த்து முன்னாள் பிரதமர் கே.பி. சர்மா ஒலியின் தலைமையிலான சிபிஎன் (யு.எம்.எல்) கட்சி சார்பில் சுபாஷ் சந்திர நெம்பாங் போட்டியிட்டார்.

332 பாராளுமன்ற உறுப்பினர்களும், 550 மாகாணப் பேரவைகளின் உறுப்பினர்களும் இதில் வாக்களிக்க உரிமை பெற்றுள்ள நிலையில், 313 எம்.பிக்கள் மற்றும் 518 எம்.எல். ஏக்களும் வாக்களித்தனர்.

இதில், 64.13 சதவீத வாக்குகளுடன் ராம் சந்திர பௌடேல் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் நேபாள ஜனாதிபதி மாளிகையில் 3ஆவது ஜனாதிபதியாக சந்திர பௌடேல் நேற்று முன் தினம் பதவியேற்றார்.

# 2 அமெரிக்க வங்கிகள் அடுத்தடுத்துச் சரிவு!

## பங்குச் சந்தைகள் ஆட்டம்!!




**நியூயோர்க், மார்ச் 15**

**அமெரிக்காவின் இரண்டு வங்கிகள் அடுத்தடுத்துச் சரிவச் சந்தித்ததை அடுத்துப் பரந்த அளவிலான நிதி நெருக்கடி தோன்றலாம் என்ற அச்சம் அங்கு எழுந்துள்ளது. இரண்டு வங்கிகளினதும் அனைத்து வைப்புகளுக்கும் அமெரிக்க அரசு உடனடியாக உத்தரவாதம் வழங்கியுள்ளது.**

உலகெங்கும் தொழில்நுட்பக் கம்பனிகளுக்குக் கடன் வழங்குவதில் நிபுணத்துவம் வாய்ந்த" சிலிக்கொன் வாலி" வங்கியும் நியூயோர்க்கின் "சிக்னேச்சர்" வங்கியும் ஓரிரு நாள்கள் இடைவெளியில் அடுத்தடுத்து பெரும் சரிவைச் சந்தித்ததை அடுத்தே அமெரிக்க வாடிக்கையாளர்களிடையே தங்கள் சேமிப்புத் தொடர்பான அச்ச நிலை தோன்றியுள்ளது.

இதனையடுத்து அதிபர் ஜோ பைடன் கருத்துத் தெரிவிக்கையில், நாட்டின் வங்கிக் கட்டமைப்புப் பாதுகாப்பாக உள்ளது. அதன் மீது மக்கள் நம்பிக்கை இழக்கக்கூடாது என்று தெரிவித்திருக்கிறார்.

இரண்டு வங்கிகளையும் நிமிர்த்துவதற்குத் தேவையான அனைத்தையும் அமெரிக்கா செய்யும் என்று அவர் உறுதியளித்தார்.

"சிலிக்கொன் வாலி" கடந்த வெள்ளியன்று அமெரிக்க அதிகாரிகளால் மூடப்பட்டது. 2008 ஆம் ஆண்டு ஏற்பட்ட நிதி நெருக்கடிக்குப் பிறகு அமெரிக்க வங்கி ஒன்றின் மிகப் பெரிய தோல்வியாக இது பார்க்கப்படுகிறது.

திடீரென அதன் வாடிக்கையாளர்கள் பெரும் எடுப்பில் மீளப் பெற்றதை அடுத்தும் புதிய நிதி வசூல்களைச் செய்வதற்கு வங்கி மேற்கொண்ட இறுதி நேர முயற்சிகள் தோல்வி கண்டதை அடுத்துமே "சிலிக்கொன் வாலி" வங்கி திவாலானது. கலிபோர்னியாவைத் தளமாகக் கொண்ட அந்த வங்கியின் சரிவை அடுத்து அச்சமடைந்த வாடிக்கையாளர்கள் பெரும் எண்ணிக்கையில் கிளைகளை முற்றுகையிட்டுத் தமது சேமிப்புகளை மீளப் பெற முண்டியடித்தனர்.

அமெரிக்க வங்கிகளின் சரிவு ஐரோப்பாவிலும் உடனடியாகவே எதிரொலித்தது. பாரிஸ், லண்டன் உட்பட முக்கிய நகரங்களில் பங்குச் சந்தைகளில் குறிப்பிடக்கூடிய வீழ்ச்சிகள் காணப்பட்டன. பிரான்ஸின் வங்கிக் கட்டமைப்புகளில் இது எந்த வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்று நிதி அமைச்சர் புருனோ லு மேயர் முதலீட்டாளர்களுக்கு உறுதி அளித்துள்ளார். (அ)

# கியூபெக்கில் பாதசாரிகள் மீது பிக்கப் மோதியதில் 2 பேர் பலி!

மொன்றியல், மார்ச் 15

கனடாவின் வடக்கு கியூபெக்கில் உள்ள அம்கி நகரில் பாதசாரிகள் மீது பிக்-அப் டிரக் மோதியதில், இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் ஒன்பது பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் வேண்டுமென்றே நடத்தப்பட்ட தாக்குதலா என்பதை புலனாய்வாளர்கள் இன்னும் தீர்மானிக்க முயற்சிக்கின்றனர்.

இந்த விபத்தை ஏற்படுத்திய 38 வயதான உள்ளூர் நபரான வாகனத்தின் ஓட்டுநரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள காயமடைந்தவர்களில் ஒரு குழந்தையும் அடங்குவதாக கனேடிய ஊடகங்கள் தெரிவித்தன.

அம்கி மக்களுடன் இருப்பதாகவும் நடந்த சோகமான நிகழ்வுகளுக்கு வருத்தம் தெரிவிப்பதாகவும் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடே தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் ஒரு பேருந்து சாரதி, மாண்ட்ரீல் பரபரப்பான தினப்பராமரிப்பு நிலையத்திற்குள் பேருந்தை மோதி விபத்தை ஏற்படுத்தி, இரண்டு குழந்தைகளைக் கொன்று பலரை காயப்படுத்திய ஒரு மாதத்திற்குப் பிறகு இந்த சம்பவம் நடந்துள்ளது. (அ)

# தானிய ஒப்பந்தத்தை 60 நாட்கள் நீடிக்கும் ரஷ்ய முன்மொழிவுக்கு உக்ரைன் எதிர்ப்பு!



கீவ், மார்ச் 15

போர்க்கால தானிய ஏற்றுமதி ஒப்பந்தத்தை 60 நாட்களுக்கு நீடிக்கும் ரஷ்யாவின் முன்மொழிவு இரு நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்தத்திற்கு எதிரானது என்று உக்ரைன் கூறியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையுடனான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து உக்ரைன் தானிய ஏற்றுமதி ஒப்பந்தத்தை நீடிக்க தயாராக இருப்பதாக ரஷ்ய தூதுக்குழு திங்களன்று அறிவித்தது - ஆனால் இன்னும் 60 நாட் களுக்கு மட்டுமே.

உக்ரைனிய உள்கட்ட மைப்பு அமைச்சர் ஒலெக்சாண்டர் குப் ராகோவ் தெரிவிக்கையில்- "ஒப்பந்தம் குறைந்தபட்சம் 120 நாட்கள் நீடிப்பை உள்ளடக்கியது. எனவே ஒப்பந்தத்தை 60 நாட்களுக்கு மட்டுமே நீட்டிக்கும் ரஷ்யாவின் நிலைப்பாடு துருக்கி மற்றும் ஐ.நா. கையெழுத் திட்ட ஆவணத்திற்கு முரணானது என்று கூறினார்.

இந்த முயற்சிக்கு உத்தரவாதம் அளிப்பவர்களாக ஐ.நா மற்றும் துருக்கியின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டிற்காக நாங்கள் காத்திருக்கிறோம் என்று அவர் மேலும் கூறினார்.

ஐ.நா மற்றும் துருக்கி ஜூலை மாதம் இரண்டு போரிடும் நாடுகளுக்கு இடையே ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தின. இது உலகின் முக்கிய தானிய உற்பத்தியாளர்களில் ஒன்றான உக்ரைனுக்கு அதன் மூன்று கருங்கடல் துறைமுகங்களில் இருந்து உணவு மற்றும் உரங்களை அனுப்ப அனுமதிக்கிறது.

120 நாள் ஒப்பந்தம், உயர்ந்து வரும் உலகளாவிய உணவுப் பொருட்களின் விலைகளில் இருந்து சிலவற்றை எடுக்க உதவியது. கடந்த நவம்பரில் புதுப்பிக்கப்பட்டது. அந்த நீடிப்பு சனிக்கிழமையுடன் காலாவதியாகிறது. மேலும் 120 நாள் நீடிப்பு அட்டவணையில் உள்ளது.

உலகெங்கிலும் பயன்படுத் தப்படும் ரஷ்ய உணவு மற்றும் உரங்களின் ஏற்றுமதியை அனுமதிக்கும் இணையான ஒப்பந்தத்துடன் இது தொடர்புபட்டது. எனினும், மேற்கு நாடுகளின் துறைமுகங்களில் சிக்கிய ரஷ்ய உரம் விடுவிக்கப்பட்டாலும், ரஷ்ய தானியங்கள் ஏற்றுமதியில் தடை தொடர்வதாக நாடு அதிருப்தியடைந்துள்ளது. (அ)

# இலங்கையுடன் டெஸ்ட் தொடர் ஏப்ரலில் வருகிறது அயர்லாந்து!



கொழும்பு, மார்ச் 15

அடுத்த மாதம் (ஏப்ரல்) இலங்கை வரவுள்ள அயர்லாந்து கிரிக்கெட் அணி 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் அயர்லாந்து மோதவுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

இந்தத் தொடருக்கான முந்தைய அட்டவணைப்படி ஒரு டெஸ்ட் போட்டியிலும், 2 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் இலங்கை, அயர்லாந்து அணிகள் மோத விருந்தன. ஆனால், தற்போது ஒருநாள் போட்டிகளுக்கு பதிலாக மற்றொரு டெஸ்ட் போட்டி சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த இரு போட்டிகளும் காலியில் நடைபெறவுள்ளன. முதல் போட்டி ஏப்ரல் 16ஆம் திகதியும் 2 ஆவது போட்டி ஏப்ரல் 24 ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளன.

2017 ஆம் ஆண்டு அயர்லாந்து டெஸ்ட் கிரிக்கெட் அந்தஸ்தை பெற்றது. இதுவரை 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள அந்த அணி அனைத்திலும் தோல்வியடைந்துள்ளது.

அயர்லாந்து இறுதியாக இங்கிலாந்துடன் லோட்ஸ் மைதானத்தில் 2019 ஜூலையில் மோதியது. இந்த நிலையில், 4 வருடங்களின் பின்னர் தனது 4 ஆவது டெஸ்ட் போட்டியில் எதிர்வரும் ஏப்ரல் 4 ஆம் திகதி முதல் பங்களாதேஷுடன் அயர்லாந்து மோதவுள்ளது. இதன்பின் தனது 5 ஆவது மற்றும் 5 ஆவது போட்டிகளில் இலங்கையுடன் மோதவுள்ளது.

அயர்லாந்து அணி - அண்ட்ரூ பெல்பைர்னி (அணித்தலைவர்), கேர்ட்டிஸ் கேம்பர், முரே கொமின்ஸ், ஜோர்ஜ் டொக்ரேல், பியோன் ஹேன்ட், கிரஹம் ஹியூம், மெத்தியூ ஹம்ஸ்ப்றீஸ், டொம் மேய்ஸ், அண்ட்ரூ மெக்பிறைன், ஜேம்ஸ் மெக்கலம், பிஜே மூர், ஹரி டெக்டர், லோர்கன், டக்கர், பென் வைட்



# ஐ. சி. சியின் சிறந்த வீரர் ஹாரி புரூக் தெரிவானார்

டுபாய், மார்ச் 15

இங்கிலாந்தின் இளம் வீரர் ஹாரி புரூக் பெப்ரவரி மாதத்துக்கான ஐ. சி. சியின் சிறந்த வீரராக தெரிவானார்.

இந்த விருதுக்காக இந்தியாவின் சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜா, மேற்கிந்தியத்தீவுகளின் குடாகஸ் மோட்டி இடையே போட்டி நிலவியது. எனினும், ஹாரி புரூக் விருதை வென்றார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பரில் டெஸ்டில் அறிமுகமான போதிலும், இங்கிலாந்து வீரர் ஹாரி புரூக் ஏற்கனவே இங்கிலாந்தின் புதிய சவாலானவீரராக உருவெடுத்து வருகிறார். டிசெம்பரில் சிறந்த வீரர் விருதை வென்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# இந்தியாவுடனான ஒருநாள் தொடர் ஆஸியின் தலைவராக ஸ்ரீவ் ஸ்மித்!

சிட்னி, மார்ச் 15

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் அஸ்திரேலிய அணியின் தலைவராக ஸ்ரீவ் ஸ்மித் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் மோதிய 4 போட்டிகள் கொண்ட தொடர் 2 - 1 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றியது. இந்த நிலையில், இரு அணிகளிடையேயுமான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் மார்ச் 17 முதல் தொடங்குகிறது. மார்ச் 22 அன்று சென்னையில் கடைசி ஒருநாள் ஆட்டம் நடைபெறுகிறது.

ஒருநாள் தொடருக்கான அவுஸ்திரேலியாவின் தலைவராகப பட் கம்மின்ஸ் அறிவிக்கப்பட்டிருந்தார். அவரின் தாயார் காலமானதால் ஒருநாள் தொடரில் பங்கேற்கவில்லை.

இந்த நிலையிலேயே, ஆஸி. அணியின் தலைவராக ஸ்ரீவ் ஸ்மித் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னதாக ஸ்ரீவ் ஸ்மித் அவுஸ்திரேலிய அணிக்காக 51 ஒருநாள் போட்டிகளுக்கு தலைமை தாங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்தியன் வெல்ஸ் ரென்னிஸ் எம்மா ரடுகானு அடுத்தசுற்றில்!

கலிபோர்னியா, மார்ச் 15

அமெரிக்காவின் இந்தின் வெல்ஸ் ரென்னிஸ் தொடரின் மூன்றாவது சுற்றில் பிரிட்டிஷின் முதல் நிலை வீராங்கனை எம்மா ரடுகானு 6-1 2-6 6-4 என்ற கணக்கில் பீட்ரிஸ் ஹடாட் மியாவை வீழ்த்தினார்.

20 வயதான ரடுகானு, பிரேசிலை சேர்ந்த தரவரிசையில் 13ஆவது நிலையிலுள்ள வீராங்கனை முதல் செற்றில் இரண்டு முறை முறியடித்தார். ஆனால் இரண்டாவது செற்றில் தனது சேர்விஸை இரண்டு முறை கைவிட்டார்.

எனினும், தீர்க்கமான செற்றில் ரடுகானு வெற்றி பெற்றார்.

அடுத்த சுற்றில் ரடுகானு உலகின் முதல் நிலை வீராங்கனையான இகா ஸ்வியாரெக்கை எதிர்கொள்ளவுள்ளார். (ஐ)





# தொடர் நாயகன் விருது; அஸ்வின் புதிய சாதனை

மும்பை, மார்ச் 15

இந்திய சுழல்பந்து வீச்சாளர் ஆர். அஸ்வின் 10 முறை தொடர் நாயகன் விருதுகளை வென்று சாதனை படைத்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி 2-1 என வென்றுள்ளது. அஹமதாபாத்தில் நடந்த கடைசி டெஸ்ட் தொடர் சமநிலையில் முடிவடைந்தது. இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக கோலி தெரிவானார். தொடர் நாயகன் விருது அஸ்வின், ஜடேஜா ஆகிய இருவருக்கும் தொடர் நாயகன் விருது பகிர்ந்தளிக்கப்பட்டது.

இந்நிலையில், டெஸ்ட் கிரிக்கெட்டில் தொடர் நாயகன் விருதை 10 முறை வென்ற முதல் இந்திய வீரர் என்கிற பெருமையை அடைந்துள்ளார் சுழல்பந்து வீச்சாளர் ஆர். அஸ்வின். மேலும் டெஸ்ட் கிரிக்கெட்டில் உலகளவில் அதிகமுறை தொடர் நாயகன் விருதை வென்ற வீரர்களில் அஸ்வின் 2ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

**தொடர் நாயகன் விருதை அதிகமுறை வென்ற இந்திய வீரர்கள்**

10 - அஸ்வின்
5 - சச்சின்
5 - சேவாக்
4 - கபில் தேவ்
4 - ஹர்பஜன் சிங்
4 - அனில் கும்ப்ளே
4 - ராகுல் டிராவிட்

**தொடர் நாயகன் விருதை அதிகமுறை வென்ற வீரர்கள்**

1. முரளிதரன் - 11
2. அஸ்வின் - 10
3. கலிஸ் - 9
4. இம்ரான் கான்ஃஹேடலிஃவோர்ண் - 8
5. வசீம் அக்ரம்ஃசந்தர்பால் - 7



## வைத்தியர்கள் சேவை புறக்கணிப்பில் ஈடுபட்டமையால் நோயாளர் பாதிப்பு!

கிளிநொச்சி, மார்ச் 15

கிளிநொச்சி வைத்தியசாலையில் வைத்தியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டமையால் நோயாளர்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டனர்.

நேற்று வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு, மாதாந்த சிகிச்சைகள் இடம்பெறவில்லை.

அத்தியாவசிய சிகிச்சைகள் மற்றும் அவசர சிகிச்சைகள் மாத்திரம் முன்னெடுக்கப்பட்டன.

இதனால் சிகிச்சைக்காக வருகை தந்த மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதுடன், அரசாங்கத்தை கடுமையாகச் சாடினர். (அ)

# தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை!

### அரச ஊழியர்களுக்கு எச்சரிக்கை



கொழும்பு, மார்ச் 15

**அத்தியாவசிய சேவைகளுக்கு என நியமிக்கப்பட்ட அரச ஊழியர்கள் நாட்டின் சட்டத்தை மீறி தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- சரத்வத்தேச நாணய நிதியத்தின் உதவியும் விரைவில் கிடைக்கவுள்ள நிலையில் நெருக்கடியில் இருந்து வெளியேற நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

அனைவரின் நலனுக்காக இந்த நடவடிக்கைகளை எடுத்துவரும் போது மக்களின் வாழ்க்கை, மாணவர்களின் எதிர்காலத்தை சீர்குலைக்க அனுமதிக்கப்போவதில்லை.

அரச சேவையை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல, அத்தியாவசிய சேவைகளாக இவற்றை பிரகடனப்படுத்தி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளான போக்குவரத்து, துறைமுகங்கள், போக்குவரத்து, தபால், மின்சார சேவைகளை வழங்க தவறினால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

# உள்ளூர் இழுவைப் படகினால் மீன்வர் வாழ்வாதாரம் பாதிப்பு

### யாழ். மாவட்ட செயலரிடம் முறைப்பாடு

கொழும்பு, மார்ச் 15

உள்ளூர் இழுவைப் படகினால் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக தெரிவித்து அனலைதீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் யாழ். மாவட்ட செயலாளரிடம் மகஜரொன்றைக் கையளித்தனர்.

யாழ். மாவட்ட செயலகத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் சென்ற அனலைதீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எஸ்.ஜோன் பொஸ்கோ, செயலாளர் வே. வின்சன், ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச செயலாளர் அ.அன்னராசா ஆகியோர் யாழ். மாவட்ட செயலாளர்



அ.சிவபாலசுநதரனை சந்தித்து மகஜரை கையளித்தனர்.

அந்த மகஜரில் குருநகர் பகுதியை சேர்ந்த உள்ளூர் இழுவை மடி தொழிலாளர்களால் உள்ளூர் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதாகவும் இதற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டது. (அ)

## விடைத்தாள் திருத்தும் பணிக்கு 6000 ஆசிரியர்கள் பற்றாக்குறை!

கொழும்பு, மார்ச் 15

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்கு மேலும் சுமார் 6000 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதிப்பீட்டு கடமைகளுக்காக இதுவரை 13,000 விண்ணப்பங்கள் மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் குறிப்பிட்டார்.

மதிப்பீட்டுப் பணிகளுக்காக சுமார் 19,000 ஆசிரியர்கள் தேவைப்படுவதாகவும் முக்கியமாக விஞ்ஞானப் பிரிவுக்கு ஆசிரியர்கள் அவசியம் என்றும் அவர் கூறினார்.

விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கு மேலதிக கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)



# கிளிநொச்சி விபத்து; முதியவர் படுகாயம்

கிளிநொச்சி, மார்ச் 15

போக்குவரத்துப் பொலிசாரின் மோட்டார் சைக்கிள் மோதியதில் சைக்கிளில் பயணித்த முதியவர் ஒருவர் தலையில் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று காலை 8.15 மணியளவில் கிளிநொச்சி வலய கல்விப்பணிமனைக்கு முன்பாக இடம் பெற்றது.

ஏ9 வீதியை சைக்கிளில் கடக்க முற்பட்டவேளை, வேகமாக பயணித்த போக்குவரத்து பொலிஸாரின் மோட்டார் சைக்கிள் முதியவரை மோதியுள்ளது.

இந்த விபத்தில் ஜேசுதாஸ் (வயது-65) என்பவரே கடுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைக்கும் பரீட்சை 25 ஆம் திகதி!

கொழும்பு, மார்ச் 15

அரச பணியில் உள்ள பட்டதாரிகளை ஆசிரியர் சேவைகளுக்கு இணைத்துக்கொள்வதற்கான பரீட்சை மார்ச் 25ஆம் திகதி நடைபெற உள்ளது.

நாடு முழுவதும் 341 நிலையங்களில் இதற்கான பரீட்சை நடத்தப்படும் என கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தத் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளை அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை பரீட்சை திணைக்களம் ஏற்கனவே எடுத்துள்ளது.

பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்கு இவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

மாகாண அடிப்படையில் உருவாகும் வெற்றிடங்களுக்கு மாகாண சபைகள் வருடாந்தம் பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

## ஊழலுக்கு எதிரான சட்டமூலத்திற்கு அங்கீகாரம் அளித்த அமைச்சரவை

கொழும்பு, மார்ச் 15

ஊழலுக்கு எதிரான சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

குறித்த சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# கோப்பாய் கலாசாலை நூற்றாண்டு மெய்வல்லுநர் போட்டி வியாழனன்று

யாழ்ப்பாணம், மார்ச் 15

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டையொட்டிய மெய்வல்லுனர் போட்டிகள் நாளை வியாழன் பிற்பகல் 2 மணிக்கு கலாசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

கலாசாலை உடலாளர் மன்ற ஏற்பாட்டில் அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் அ. சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகவும் கலாசாலையின் முன்னாள் அதிபரும் பிரான்ஸ் அரசினால் செவாலியர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவருமாகிய சிவயோகநாயகி இராமநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

## கூட்டமைப்பும்...

தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஏனைய அமைப்புகளை ஒன்றிணைத்து இந்தக் கூட்டணி அமைக்கப்படவுள்ளது.

தமிழ் மக்களின் ஒட்டுமொத்த பிரச்னைகளையும் நாட்டுக்கும் வெளி நாடுகளுக்கும் கொண்டு செல்வதே இதன் முக்கிய நோக்கம் என்றும் அவர் கூறினார். (ஐ)

## அரசதுறைகள்...

ஈடுபடவுள்ளன.

**சுகாதார துறை**

வரி உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் திங்கட்கிழமை முதல் பணிப் புறக் கணிப்பில் ஈடுபட்டு வருகின்றது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை வடக்கு உட்பட 4 மாகாணங்களிலும் நேற்று செவ்வாய்க்கிழமை கிழக்கு உட் பட 4 மாகாணங்களிலும் மருத்துவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில் இன்றைய தினம் நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பில் மருத்து வர்கள் ஈடுபடவுள்ளனர்.

இதேவேளை, இன்றைய பணிப் புறக்கணிப்பு போராட்டத்துக்கு அகில இலங்கை தாதியர் சங்கம் ஆதரவளிப்ப தாக அறிவித்துள்ளது.

**அஞ்சல் துறை**

இன்றைய தினம் அஞ்சல் துறையின ரும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவர் என்று ஒன்றிணைந்த தபால் சேவைகள் தொழில்சங்கம் அறிவித்தது. இதற்கு வசதியாக நேற்று மாலை முதல் மெயில் ஊழியர்கள் பணிகளிலிருந்து விலகினர்.

**போக்குவரத்து துறை**

இலங்கை புகையிரதத் திணைக்களத் தின் ரயில் இயக்குநர்கள், பொறியியலா ளர்கள் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 24 மணிநேர வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர். இதற்கு வசதியாக முற்கூட்டியே சில ரயில் சேவைகள் நேற்று மாலை முதல் நிறுத் தப்பட்டன.

**கல்வித் துறை**

இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் மற்றும் அதிபர் கள் சங்கங்கள் என்பன இன்றைய தினம் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன. வரி எதிர்ப்புடன் சம்பள உயர்வையும் கோரி அவர்கள் போராட்டத்தை இன்று நடத்துகின்றனர்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்க ளின் சம்மேளனம் வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்தது. இந்தப் போராட் டத்துக்கு கல்விசாரா ஊழியர்களின் சங்கங்கள் மற்றும் பல்கலைக்கழகங்க ளின் கூட்டுக் குழுக்கள் என்பனவும் ஆதரவு தெரிவித்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

**வங்கித் துறை**

நாட்டில் இயங்கும் அனைத்து வங்கி சேவைகளும் இன்று முழுமையாக முடங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள் ளது.

**துறைமுகங்கள் சேவை**

துறைமுக அதிகார சபையின் அனைத்து தொழில்சங்கங்களும் இன்றைய தினம் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் என்று அறிவித்துள்ளன.

**மின்சார சேவை**

இலங்கை மின்சார சபையின் அனைத்து ஊழியர்களும் இன்றைய தினம் சுகயீன விடுமுறைப் போராட்டத் தில் ஈடுபடவுள்ளனர்.

**பொது நிர்வாகமும் பாதிக்கும்**

இன்றைய தினம் முன்னெடுக்கப் படும் போராட்டத்துக்கு அரச முகா மைத்துவ உதவியாளர் சங்கம் உள் ளிட்ட சங்கங்கள் ஆதரவு தெரிவித்துள் ளன. இதனால், அனைத்து அரச நிர்வாக சேவைகளும் முற்றாகப் பாதிக்கப்படும் அல்லது மந்தகதியில் சேவைகள் இடம் பெறும் என்றும் தெரிய வருகின்றது.(ஐ)

## நாமல்...

வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற மக்கள் பேரணியில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மக்கள் கஷ்டப்படும் நிலையில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப் பினர்கள் நாமல் ராஜபக்ஷவுடன் கிரிக் கெட் விளையாடுகின்றனர். நாமல் ராஜ பக்ஷ ரணிலைப் போன்றவர். இன்னும் எதையும் கற்றுக்கொள்ளவில்லை. மக் கள் கோபப்படுவது நியாயமானது. அவர் ஒருபோதும் கற்றுக்கொள்ள மாட்டார். அவர் முன்கூட்டியே வளர்ந்த புறொய்லர் கோழி. நாட்டினதும் ராஜபக்ஷ குடும்பத்தின் வீழ்ச்சிக்கும் உறவுமுறையே - குடும்பமே காரணம் என்றும் அவர் கூறினார். (ஐ)

## பிரதமர்...

பொதுஜன பெரமுனவினால் அழுத்தம் கொடுக்கப்படுகிறது என்று வெளியான தகவல்கள் தொடர்பில் செய்தியாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

மேலும், "தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு ராஜபக்ஷ தரப்பிலிருந்து எந்த அழுத்தமும் இல்லை. மகிந்த ராஜபக்ஷ தலைமை யிலான சிறீ லங்கா பொதுஜன பெரமுன பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு முழு ஆதரவு வழங்குகின்றது. பொது ஜன பெரமுனவின் நம்பிக்கையை வென்ற சிறந்த அரசியல்வாதி என்றபடியால்தான் தினேஷ் குணவர்த்தனவை இந்த அரசு பிரதமராக நியமித்தது. அரசின் கட்ட மைப்பைச் சீர்குலைக்க முயற்சிப்ப வர்கள் நாளுக்கு நாள் வதந்திகளை வெளியிடு வார்கள். அதில் ஒன்றுதான் மீண்டும் பிரதமர் பதவியை மகிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்கவுள்ளார் என்பதும் அடங்கும் என்று நான் நினைக்கின்றேன்" - என்றார். (ஐ)

## பொதுமக்கள்...

மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இதேசமயம், அந்தப் பகுதியிலுள்ள முருகமூர்த்தி ஆலய சப்பைரத கொட்ட கைக்கு தீ வைக்கப்பட்டுள்ளது. இதில், அது முற்றாக எரிந்து தீக்கிரையானது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

நாகர்கோவில் பகுதியில் மயானம் ஒன்றை சுற்றி மதில் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று நடைபெறவிருந்தது. இந்தநிலையில் நேற்று திங்கட்கிழமை, மதில் கட்டுவது தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டு மதில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்த புலம் பெயர்ந்து வாழும் நபர் ஒருவர்மீது ஊரில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்ட தாகக் கூறப்படுகின்றது.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த நபர் பருத்தித்துறை ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அத்து டன், சம்பவம் தொடர்பில் பொலிஸா ரிடம் முறையிடப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்றிரவு 8 மணியளவில் சம்பவ இடத்துக்கு பொலிஸார் விசாரணைக்கு சென்றனர்.

அங்கு சென்ற பொலிஸாருக்கும் அப்பகுதியில் நின்றவர்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. பின்னர் அப்பகுதியில் மக்கள் கூடிய நிலையில் பொலிஸார் பொதுமக்களி டையே தள்ளுமுள்ளு ஏற்பட்டு கைகலப்பானதாகக் கூறப்படுகின்றது.

அந்த சமயத்தில் பொலிஸார், மக்கள் மீது தடியடி நடத்தினர். அத்துடன், துப் பாக்கி சூடுகளும் நடத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. எனினும், துப் பாக்கி சூட்டு சம்பவத்தை தாம் நடத்த வில்லை என்று மறுத்துள்ளனர் என்ப தும் குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

## மயானம்...

விசாரணைகளை முன்னெடுத்தனர். இதன்போது, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர், நாகர்கோயில் மேற்கு மக்களும் கூடியிருந்தனர்.

விசாரணைகளின் முடிவில் மயா னத்துக்கு மதில் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வும் இடைநிறுத்தப்பட் டது. அத்துடன், பொதுமக்கள் மீதான தாக்குதல், துப்பாக்கி பிரயோகம் குறித்தும் விசாரணைகளை நடத்துவ தாகவும் உறுதியளிக்கப்பட்டது. (ஐ-02)

## உள்ளூராட்சி சபை...

சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வரகாகொட சிறீ ஞானரத்ன தேரர் ஆகியோர் ஜனாதி பதிக்கு எழுதிய கடிதத்திலேயே இவ் வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

வாழ்க்கை செலவை குறைப்பதற்கும் - மக்களின் சுமையை குறைப்பதற்கும் - சமூக அமைதியின்மையை கட்டுப் படுத்துவதற்கும் முறையான - கொள்கை அடிப்படையிலான பொறிமுறையை அறிமுகப்படுத்த வேண்டும்.

நாடு பொருளாதார ஸ்திரத் தன் மையை அடைவதை உறுதிசெய் வதில் அனைத்து பங்குதாரர்களும் தங்கள் கடமைகளையும் பொறுப்புகளையும் புரிந்துகொள்வது அவசியம். பொரு ளாதார நெருக்கடியின் முழுச் சுமை யையும் மக்கள் மீது சுமத்தாமல், பணத்தை முறையாக நிர்வாகம் செய்து ஊழலை ஒழிக்கவும், பொது வளங்களை தவறாகப் பயன்படுத்துவதை தடுக்கவும் - மக்கள் பிரதிநிதிகள் அனுபவிக்கும் வரம்பற்ற சலுகைகளை நிறுத்தவும் - நடைமுறை தீர்வுகளின் மூலம் மக்களின் துன்பங்களைக் குறைக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என் றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது. (ஐ)

## உள்ளூராட்சி...

திகதியில் இருந்துதான் பதவிக்காலம் ஆரம்பமாகும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இரா ஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர பாராளுமன்றத்தில் கடந்த வாரம் இடம் பெற்ற 'சர்வஜன வாக்குரிமை' தொடர் பான சபை ஒத்திவைப்பு விவாதத்தின் போது குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றங்களின் புதிய பதவி காலம் தொடர்பில் சகல தரப்பின ருடன் பேச்சில் ஈடுபட விடயதானத் துக்கு பொறுப்பான அமைச்சர் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தீர்மானித்துள்ளா ரெனவும் தெரிவு செய்யப்படும் உறுப்பி னர்களின் பதவிக்காலம் ஆரம்பமாகும் திகதி தொடர்பில் சிறந்த அறிவிப்பை விடுக்குமாறு தேசிய தேர்தல் ஆணைக் குழுவிடம் வலியுறுத்தியுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் தெரி வித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இழுபறி நிலையில் உள்ளதன் பின்னணி யில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை நள்ளிரவுடன் காலி மாவட் டத்தின் எல்பிட்டிய உள்ளூராட்சி மன் றத்தை தவிர ஏனைய உள்ளூராட்சி மன் றங்களின் பதவிக் காலம் நிறைவடையும்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பயன்படுத்திய அரச சொத்துக்கள் மற் றும் அரச வாகனங்கள் அனைத்தும் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் உரிய அரச நிறுவனங்களிடம் ஒப்ப டைக்குமாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு சகல உள்ளூராட்சி மன்றங்களின் தலை வர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளது.

பதவிக் காலம் நிறைவடையும் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரம் மற்றும் நிர்வாகம் மாநகர ஆணையா ளர்கள் மற்றும் பிரதேச சபை செயலா ளர்களுக்கு பொறுப்பாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## கிழக்கில் சதுப்பு நில தாவரங்களை வளர்க்கும் ஐக்கிய அரபு இராச்சியம்!

கொழும்பு, மார்ச் 15

கிழக்கு கடற்பரப்புக்களில் சதுப்பு நில தாவரங்களை வளர்க்க ஐக்கிய அரபு இராச்சியம் தீர்மானித்துள்ளது.

2030 ஆம் ஆண்டளவில் நாட்டின் மற்றும் உலகின் மிக மதிப்புமிக்க கடல் பகுதிகளில் 10 மில்லியன் சதுப்புநில தாவரங்களை வளர்ப்பதற்கான ஒரு சிறந்த திட்டத்தை ஐக்கிய அரபு இராச்சி யம் இந்த ஆண்டு அறிமுகப்படுத்தி யுள்ளது.

அந்த செயற்திட்டத்தில் கிழக்கு மாகாணத்தின் கடல் பகுதியும் உள்ள டங்கும் என இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சிய தூதுவர் காலீத் நாஸர் சுலைமான் அல் அமீரி தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்துடனான சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (அ)

## வேலை...

போக்குவரத்து , துறைமுகம் , தபால், மின்சாரம் உள்ளிட்ட அனைத்தும் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகட னப்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

(விரிவான செய்தி பக்கம் 10 இல்)

## போக்குவரத்து...

பொது போக்குவரத்து சேவைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக்கூடாது என போக்குவரத்து அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார். ஆகவே, பொது பயணி கள் அச்சமில்லாமல் இன்றைய தினம் தமது அன்றாட பணிகளில் ஈடுபடலாம் என இலங்கை போக்குவரத்து சபை அறிவித்துள்ளது.

இதேசமயம், அரசியல் நோக்கங் களை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் தொழில்சங்க போராட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க போவதில்லை. மாத வருமானம் பெறும் அரச ஊழியர்களால் போராட் டத்தில் ஈடுபட முடியும். ஆனால், நாட்கூலி பெறும் தரப்பினரால் போராட்டத்தில் ஈடுபட முடியாது.

புகையிரத தொழில்சங்க பணி புறக்கணிப்பு போராட்டத்தால் பொது போக்குவரத்து சேவை முழுமையாக ஸ்தம்பிதமடையாது. பாடசாலைகள், அலுவலகங்கள் உட்பட பொது சேவை கள் அனைத்தும் வழமை போல் இடம் பெறும் என்று தனியார் பேருந்து நிலைய உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

## தமிழ்...

இனத்தவரால் வலையால் கட்டிவைக்கப் பட்ட நிலையில் நேற்று மீட்கப்பட் டார்.

இந்த விடயம் தொடர் பில் அந்தப் பகுதி கிராம உத்தியோகத்தர் ஊடாக பிரதேச செயலருக்கு தெரியப்படுத்தப் பட்டது. இதைத் தொடர்ந்து பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

இதனிடையே, மீனவரை கட்டி வைத்த பெரும்பான்மை இனத்தவர் அந்தப் பகுதியில் அடாத்தாக காணி ஒன்றைப் பிடித்து வீடு ஒன்றை அமைத்து தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார். இது தொடர்பாக காணியின் உரிமையாளர் தொடர்ந்த வழக்கில் அடாத்தாக குடியிருக்கும் நபரை அங்கிருந்து வெளியேறுமாறு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஆனால், அந்த உத்தரவை எதிர்த்து மேன்முறையீடு செய்துள்ள நபர் தொடர்ந்தும் அங்கேயே குடியிருக்கி றார் என்றும் தெரிய வருகின்றது.

இதனிடையே, மீனவரை எதற்காக கட்டிவைத்தீர்கள் என்று அப்பகுதியினர் கேட்டதற்கு, "உடல்நலப் பாதிப்புக்கு உள்ளானதால் அவ்வாறு செய்தேன்", என்று அவர் பதிலளித்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ரயில்வே ஒரு நாள் பணிப் பகிஷ்கரிப்பு

*கொழும்பு, மார்ச் 15*

திட்டமிட்டபடி நேற்று நள்ளிரவு முதல் ஒரு நாள் பணிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட உள்ளதாக ரயில்வே தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

5 கோரிக்கைகளை முன்வைத்து இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளதாக சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் விதானகே தெரிவித்தார். (அ)

# ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி!

*கொழும்பு, மார்ச் 15*

டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி நேற்று வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, நேற்று அமெரிக்க டொலரின் கொள் முதல் பெறுமதி **319.84** ஆகவும், விற்பனை பெறுமதி **335.68** சதமாகவும் பதிவாகியுள்ளது.

இந்த மாதத்தின் தொடக்கத்தில் இருந்து டொலர் மற்றும் ஏனைய முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கு நிகரான ரூபாயின் மதிப்பு உயர்ந்து வந்திருந்தது.

இருப்பினும் கடந்த வெள்ளிக்கிழமை முதல் டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு மீண்டும் சரிந்து வருகிறமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மரண அறிவித்தல்



## திருமதி கபிரியல்பிள்ளை தங்கராசம் ஆரோக்கியம்

யாழ். கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கபிரியல்பிள்ளை தங்கராசம் ஆரோக்கியம் கடந்த 10-03-2023 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற கபிரியல்பிள்ளை தாவீது (கோப்பாய் தெற்கு புனித மரியாள் ஆலய மூப்பனார்) அவர் களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அகுஸ்ரின் - அருளம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அகுஸ்ரின் தம்பிராசா, இராசேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தாவீது செல்லத்துரை, றோசம்மா, பூபதி, அன்னதிரவியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பாக்கியராணி(பட்டு), ஸ்ரனிஸ்லாஸ்(அப்பு), கிறிஸ்ரின் புஸ்பம்(குஞ்சு), றோஸ் மேரி(றோசு), ரெஜினோல்ட் (பவுணி) ஆகியோரின் அன்புத் தாயாரும், அல்போன்ஸ் அரியநாயகம், மாலினி குணரட்ணம், கொஸ்ரன்னரன், சுபசுதா ஆகியோரின் அன்பு மாமியாரும், தளபதி - குலோத்துங்கன், புவிஅரசி, தரணி, பாஸ்டர், கலிஸ்ரஸ், வானதி, வசந்தினி, ஸ்ரெபனி, ஸ்ரெபன், சரா, ஜெனிசியா, அலக்சியா, அலக்சான்ரா, ஜெனிஸ்டன், ஜெனி சியஸ் ஆகியோரின் அன்புப் பேத்தியும்,னொளான், ஆதெஸ், சண், என்ஸோ, எடன், ஓவியா - இயான், இலியானா, சயான், லெவின், செலியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவர்.

அன்னாரின் இறுதிக் கிரியை நாளை (15.03.2023) புதன்கிழமை காலை 11.45 முதல் 2.30 மணியளவில் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

தகவல்
**குடும்பத்தினர்**

# தொழிற்சங்க போராட்டத்தில் மாற்றம் எதுவுமே கிடையாது!

## ஜோசப் ஸ்டாலின் திட்டவட்டம்



**கொழும்பு, மார்ச் 15**

**இன்று முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ள தொழிற்சங்க போராட்டம் எவ்வித மாற்றமும் இன்றி அவ்வாறே முன்னெடுக்கப்படும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

“ஆசிரியர், அதிபர் ஒழுங்கமைப்பாகவே இந்த போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

கல்வித்துறை தற்போது முகம் கொடுக்கும் சவால்களுக்கும் தீர்வை பெற்றுத்தர வேண்டும் என்பதே எமது பிரதான கோரிக்கையாக அமைந்துள்ளது.

விசேடமாக அதிபர் ஆசிரியர்களின் சம்பள கொடுப்பனவின் அடுத்த பகுதியை பெற்றுத்தருதல், **20,000** நிவாரணத்தை வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே நாம் இந்த தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

அதேபோன்று அதிபர், ஆசிரியர்கள் தங்களது சேவையில் தற்போது முகங்கொடுக்கும் பிரச்னைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கவேண்டும் என்பதும் எமது பிரதான கோரிக்கையாக அமைந்துள்ளது.

பொருளாதார நெருக்கடியால் பாடசாலை உபகரணங்களை பெற்றுக்கொடுப்பது என்று பெற்றோருக்கு இன்று பாரிய சுமையாக மாறியுள்ளது.

பாடசாலைகளின் முழுமையான சுமை பெற்றோருக்கே வழங்கப்பட்டுள்ளது.

உடனடியாக இந்த சுமையில் இருந்து பெற்றோர் விடுவிக்கப்படவேண்டும்.

பாடசாலை உபகரணங்களில் விலை பன்மடங்கு அதிகரித்துள்ளது. அதற்கு எவ்விதத் தீர்வும் இல்லை. அதேபோன்று, மந்தபோசனை பிரச்னையிலிருந்து சிறுவர்களை மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்களையும் அரசாங்கம் இதுவரை முன்வைக்கவில்லை.

அதேபோன்று வங்கி கடனின் வட்டிவீதத்தை அதிகரித்துள்ளார்கள். அதனை குறைக்குமாறு நாம் அரசாங்கத்திடம் கோரிக்கை வைத்துள்ளோம்.

அதேபோன்று அரசாங்கம் முன்னெடுத்துவரும் ஒடுக்குமுறைகளை உடனடியாக நிறுத்த வேண்டும்“ என்றார். (அ)

# பிணை எடுப்பு பொதியின் முதல் தவணை இம்மாதம்!

## இலங்கை அரசு நம்பிக்கை

*கொழும்பு, மார்ச் 15*

பிணை எடுப்புப் பொதிக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை அனுமதி வழங்கியதன் பின்னர், இம்மாதம் அதன் முதல் தவணை இலங்கைக்கு கிடைக்கபெறுமென எதிர்பார்ப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

எதிர்வரும் **20** ஆம் திகதி, **2.9** பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பிணை எடுப்புப் பொதிக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை அனுமதி வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

குறித்த அனுமதி கிடைக்கும் பட்சத்தில், எதிர்வரும் **22** ஆம் திகதி முதல் தவணையாக **330** மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை பெறும் என இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நம்பிக்கை வெளியிட்டார். (அ)

# வைத்தியரான தன் மனைவியை வெட்டிய வேட்பாளரான கணவர்!

*கொழும்பு, மார்ச் 15*

கொழும்பு டி சொய்சா வைத்தியசாலையில் கடமையாற்றும் பெண் வைத்தியர் ஒருவர், தமது கணவரினால் கத்தியால் வெட்டியதில் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக கம்பஹா - நுங்கமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த வைத்தியர் ராகம போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் கூறினர்.

வைத்தியரை கத்தியால் வெட்டி காயப்படுத்தியதாக கூறப்படும் வைத்தியரின் கணவர், கம்பஹா மாவட்டத்தில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரொருவர் என பிரதேசத்துக்கு பொறுப்பான பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் வைத்தியரின் முதுகு மற்றும் கைகளில் வெட்டுக் காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வைத்தியரின் கையடக்கத் தொலைபேசியில் காணப்பட்ட தொலைபேசி இலக்கமொன்று தொடர்பில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதையடுத்து சந்தேக நபரான கணவர் கத்தியால் வெட்டி, அவரை காயப் படுத்தியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# ரயில்வே ஊழியர்களின் விடுமுறைகள் இரத்து!

*கொழும்பு, மார்ச் 15*

இலங்கை ரயில்வேயின் அனைத்து ஊழியர்களின் விடுமுறையும் உடன் அமுலுக்கு வரும் வகையில் இரத்து செய்யப்பட்டுள்ளதாக இலங்கை ரயில்வே அத்தியட்சகர் தெரிவித்தார்.

ரயில்வே தொழிற்சங்கம் நேற்று நள்ளிரவு முதல் **24** மணி நேர வேலை நிறுத்தத்தை அறிவித்ததை அடுத்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

புதிய வரிக் கொள்கை மற்றும் பல பிரச்னைகளுக்கு எதிராக பல தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கும் பாரிய வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாக இந்த தொழிற்சங்க நடவடிக்கைக்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. (அ)

# தேர்தலை நடத்தக் கோரி உயர்நீதிமன்றத்தில் மனு!

*கொழும்பு, மார்ச் 15*

உள்ளூராட்சித் தேர்தலை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்த உத்தரவிடக் கோரி தேசிய மக்கள் சக்தி உயர் நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்துள்ளது.

திறைசேரிச் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, சட்டமா அதிபர், தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் பலர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்ட இந்த மனுவை தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் டாக்டர் நிஹால் ஜயசிங்க ஆகியோர் தாக்கல் செய்துள்ளனர்.(அ)

# ஐ.எம்.எவ் கடன் கிடைத்ததும் அமைச்சரவையில் மாற்றம்!

## உறுதிப்படுத்தினார் ஹரின்

*கொழும்பு, மார்ச் 15*

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைக்கப்பெற்ற பின்னர் அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் என்று அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

இதன்போது எதிரணியில் உள்ளவர்களும் அரசுடன் இணைவார்கள் எனவும் அவர் கூறினார்.

அதேவேளை, அமைச்சரவை மறுசீரமைப்பு குறித்து அமைச்சரவையில் கலந்துரையாடப்படவில்லை என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.